
Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1428) T.P.-2223565

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷ·பான் 02 (29.09.2003) திங்கட்கிழமை இதழ்:359

# புலிகளின் அயர்லாந்து மாநாட்டுக்கு நெல்சன் மண்டேலாவுக்கும் அழைப்பு!

இந்த வாரம் அயர்லாந்தில் டப்ளின் நகரில் நடைபெறவுள்ள அரசியலமைப்பு அறிஞர்களின் மாநாட்டில் கௌரவத்துக்குரிய பார்வையாளராகக் கலந்துகொள்ளுமாறு - முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஆராயும் இந்த இரண்டாவது கூட்டத் தொடரில் - தென்னாபிரிக்காவின் சமஷ்டி தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனாலேயே இதனாலேயே நெல்சன் மண்டேலா அங்கு சமுகமளிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று புலிகள் கருதுகின்றனர்.

இதேவேளை, தென்னாபிரிக்காவில் உள்ள விடுதலைப் புலிகளும் மண்டேலா இந்தக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவது பொருத்தமானது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மண்டேலா இந்த கூட்டத்தொடரில் பங்குபற்றினால், அது மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக அமையும் எனக் கருதப்படுகிறது.

இந்த மாநாட்டிற்குரிய செலவுகளை பிரித்தானிய அரசாங்கம் ஏற்கவுள்ளது.

இந்த மாநாடடிக்கு புகழ்பெற்றவர்களை அழைப்பதில் விடுதலைப் புலிகள் தீவிரம் காட்டிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் - கனடாவின் முன்னாள் மாகாண அமைச்சர் ஒருவரும் 'டப்ளின் மாநாட்டில்' பங்கு கொள்ளவுள்ளார்.

அத்துடன், தென்னாபிரிக்கா, வட அயர்லாந்து, கிழக்குத் திமோர், கனடா, கியுபெக் ஆகிய நாடுகளிலும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நீண்டகால யுத்தம் ஏற்படும் சூழல் நாட்டில் உருவாகி வருகின்றது!

## எச்சரிக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா




நாட்டில் நீண்டகால யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான சூழல் ஒன்று உருவாகிவருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு விகாரமாதேவி திறந்தவெளி அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளின் சங்கத்தின் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசு சமாதானம் என்று (10 ஆம் பக்கம் பார்க்க)

# தேசியக் கொடி ஏற்றுவதைத் தடுப்பது மனித உரிமைகளை மீறுகின்ற செயல்!



நேற்றைய கலந்துரையாடலில் தமிழ்ச்செல்வனுடன் ரெலவ்சன்.

## கண்காணிப்புக் குழுவினருக்கு புலிகள் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன் தலைமையிலான குழுவினருக்கு, தமிழீழத் தேசியக்கொடி தொடர்பான விளக்கத்தை அளித்த விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள், இந்த விடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலையீடு செய்வது மனித உரிமைகளை மீறும் செயல் என வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.**

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது குறித்து ஆராய்வதற்கான விசேட சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே மேற்கண்ட கருத்து வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் தலைமையிலான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை உட்பட வடக்கு - கிழக்கிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவினரும்,

அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட குழுவினரும் இதில் கலந்துகொண்டனர்.

சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு, கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்றது.


யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாக மாவட்ட மட்டத்தில் நிலவுகின்ற வழிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு விட

(10 ஆம் பக்கம் பார்க்க)



# தொடர்புகள், தகவல் பரிமாற்றத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய கலந்துரையாடலில் இருதரப்புப் பிரதிநிதிகள்.

# தொடர்புகள், தகவல் பரிமாற்றத்தை அதிகரிப்பது குறித்து பேச்சு நடந்தது!

## கண்காணிப்புக்குழுத் தலைவர் பி.பி.சிக்கு பேட்டி

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்புக் குறித்து கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

அனைத்து மாவட்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கிடையிலும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் உள்ளடக்கிய பெரிய கூட்டமாகவும் ஆக்கபூர்வமான கூட்டமாக இது இருந்தது.

எங்களுக்கிடையில் தொடர்புகளையும் தகவல் பரிமாற்றத்தையும் கூடிய அளவில் மேம்படுத்திக்கொள்வதென்ற, தேவைப்படும் நேரத்தில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான அமைப்பு ஒன்றை உருவாக்கப்படுவது குறித்தும் நாங்கள் விவாதித்தோம்.

விடுதலைப் புலிகளின் கொடி விவகாரமும் இந்தக் கூட்டத்தில் விவா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள்; சுபாஸ் ஹோட்டலில் இன்று கூட்டம்!

## இராணுவ, கடற்படை அதிகாரிகள் கலந்துகொள்கின்றனர்

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள்குழுவின் பிரதிநிதிகளுக்கும் - யாழ். மாவட்ட இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் இடையில், உயர்பாதுகாப்பு வலயம், மீன்பிடி மற்றும் அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். நகரில் நிலைகொண்டுள்ள 511 படைப்பிரிவின் தலைமை அலுவலகமான சுபாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியல் குறிப்பிட்ட சில இடங்களில் மக்கள் மீளக்குடியமரமுடியும் என, கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிவில் நிர்வாக அலுவலகத்தினால்- சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவிற்கு தெரிவிக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (111)

# இருவேறு விபத்துக்களில் கிளிநொச்சியில் மூவர் பலி!

கிளிநொச்சியில் நேற்று நடந்த இருவேறு விபத்துக்களில் மூவர் கொல்லப்பட்டனர். 7 பேர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி பிரதான தபால்கத்திற்கு அண்மையில் - ஏ-9 நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த டொல்பின் வாகனம் மற்றும் முச்சக்கரவண்டி என்பவற்றுடன் எதிரில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில், மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவரான காரைநகரைச் சேர்ந்தவரும், கிளிநொச்சியில் தனியார் வர்த்தக நிலையமொன்றில் பணிபுரிபவருமான க. செந்தில்நாதன் (வயது24) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவத்தில் முச்சக்கர வண்டி சாரதியான பரந்தனை வசிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# கிரவல் வீதிப் போக்குவரத்தை நிறுத்தி தார் வீதியைப் போட வசதி செய்யுங்கள்

## வவுனியா அரச அதிபரிடம் மகஜர்

கிரவல் போட்டு வீதியையும், பணத்தையும் வீண்டிக்கும் வேலைத் திட்டத்தை உடனடியாக நிறுத்தி சீரான முறையில் வீதியை பராமரிக்க உரிய திணைக்கங்களுக்கு பணிப்புரை வழங்கவேண்டும் என்று, வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வைரவப்புளியங்குளம் கிராமிய புனர்வாழ்வுக் குழுவே இவ்வாறான வேண்டுகோளை விடுத்துள்ளது.

அந்தக்குழு அரச அதிபருக்கு அளித்துள்ள மகஜர் ஒன்றில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எமது கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வீதிகள் அனைத்தும் பராமரிப்புச் செய்யப்படாமல் உள்ளதால் நீண்ட காலமாக போக்குவரத்து செய்யமுடியாத நிலையிலுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு அறிவித்தும் எந்தவித உரிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தற்போது புகையிரத நிலைய வீதியின் இருப்பக்கமும், கிரவல் போட்டு மூடும் வேலைகள் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது. தற்காலிகமாக என்றாலும் மோட்டார் கிரேடரை பாவித்து மழைநீர் வழிந்தோடக்கூடிய ஏற்பாடு செய்யாமல் கிரவலை போட்டு மூடுவதால் எந்தப்பயனும் ஏற்படப்போவதில்லை.

மீண்டும் மழை பெய்யும் போது, போட்ட கிரவல் அனைத்தும் மழைநீரால் அரித்துச் செல்லப்பட்டு விடும். அத்துடன், வீதியில் ஏற்பட்டுள்ள உடைவுகளை தார் போட்டுச் சீர் செய்யாமால் கிரவல் போட்டு மூடுவதால் விபத்துக்கள் ஏற்படவே வழிவகுக்கும்.

எனவே, கிரவல் போட்டு வீதியையும் அரச பணத்தையும் வீணடிக்கும் வேலைத்திட்டத்தை உடனடியாக நிறுத்தி சீரான முறையில் வீதியைப் பராமரிக்க உரிய திணைக்களங்களுக்கு, பணிப்புரை வழங்குமாறு, கேட்டுக்கொள்வதாக அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இருபத்தையாயிரம் பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டது

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சிவபூதராயர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீட்டிற்கு வாக்குச் சொல்லச் சென்ற காவியுடைதரித்த ஏமாற்றுப் பேர்வழி - வயோதிப மாதுவின் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு சோடி காப்புக்களுடன் தலைமறைவாகியுள்ளான்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

கடந்த வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நவரத்தினம் - இரத்தினம்மா (வயது 73) என்பவருடைய வீட்டிற்கு, சுமார் 45 வயது மதிக்கத்தக்க காவியுடை தரித்த துறவி ஒருவர் நாகதம்பிரான் சிலையுடன் வந்ததாகவும், துறவி சில வாக்குகளைக் கூறவே அதில் உண்மைத் தன்மை இருப்பதாக மாது கூறிய போது, துறவி வீபூதியை வழங்கி நெற்றியில் பூசுமாறு கூறியுள்ளார்.

பின்னர், நாகதம்பிரானது பூசையில் வைத்துவிட்டு தருவதாக காப்புக்களை வாங்கி பாசாங்கு செய்துவிட்டு, துறவி மாயமாக மறைந்துவிட்டார்.

சற்றுவேளையில் அவ்விடம் வந்த மகள் தாயாரின் கைகளில் காப்புக்கள இல்லாததைக் கண்டு கேட்கவே அம் மாதுவிற்கு நினைவு திரும்பி நடந்தவற்றைக் கூறினார்.

உடனடியாக இப்பிரதேச இளைஞர்கள் ஒன்று சேர்ந்து துறவியைப் பல இடங்களில் தேடிப் பார்த்த போதும் அவரைக் காணமுடியவில்லை. இந்தச் சம்பவம் இப்பிரதேச மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் அரை மணி நேரத்திலேயே நடைபெற்றுள்ளது.

தற்போது ஏமாற்றுப் பேர்வழிகள் தொடர்பாக இக்கிராம இளைஞர்கள் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

# குடிநீர் என நினைத்து அசிட் அருந்திய இளைஞன்

## வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

குடிநீர் என நினைத்து, அசிட்டை அருந்தியவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் நடைபெற்றது. இப்பகுதியில், வசித்து வரும் எஸ்.திருக்கேதீஸ்வரன் (வயது 22) என்பவர் வழமையாக அந்த இடத்தில் ஒன்றரை லீட்டர் போத்தலில் குடிநீர் இருப்பதாகவும், குடிநீர் என நினைத்து கடந்த வெள்ளிக்கிழமை அவ்விடத்திலிருந்த அசிட்டை அருந்தியதால், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (122)

# சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிர்வாக சேவையில் தொடர விருப்பம்

(யாழ்ப்பாணம்)

அரசால் உருவாக்கப்பட்டுள்ள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலிருந்து தம்மை நீக்கி தமது தனித்துவத்தை தொடர்ந்து பேண நடவடிக்கை எடுக்குமாறு வட-கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வட - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தி.ரி.வி. விஜயலட்சுமியிடம் நேரில் சந்தித்து, வட- கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் இந்தக் கோரிக்கைகளை விடுத்துள்ளார்.

வருடந்தோறும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, போதிய நிதி ஒதுக்கீடு செய்து சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் பங்குகொள்ள செய்ய வேண்டும். நிர்வாக சேவை பரீட்சையில் தோற்ற வாய்ப்பளிக்க வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். சேவை தரத்தில் விசேட தரத்தை உருவாக்கி புதிய சம்பளம் நிர்ணயிக்கப்படவேண்டும். சமூக சேவை உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர்.

# கண்ணிவெடி அகற்றுவதில் டெனிஷ் குழுவும் ஈடுபடும்!

வடக்கு - கிழக்கு பகுதிகளில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளில் டென்மார்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் டெனிஷ் மிதிவெடி அகற்றும் குழுவும் ஈடுபடவுள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்தக் குழுவினர் தமது செயற்பாடுகளை ஆரம்பிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான், இந்தோனேஷியா, சோமாலியா, ஈராக் ஆகிய நாடுகளில் கடமையாற்றும் இந்தக் குழுவினர் இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மூன்று வருடங்களுக்கு தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## எரிகாயங்களுடன் பெண் ஆபத்து நிலையில்

பெற்றோல் கலந்த மண்ணெண்ணையினை லாம்பினுள் விட்ட வேளை, லாம்பு தீப்பற்றிக் கொண்டதில் இளம்பெண் ஒருவர் எரிகாயங்களுக்குள்ளானார்.

இந்தச் சம்பவம் விசுவமடு உழவனூர் பகுதியில் அண்மையில் நடைபெற்றது. முரசுமோட்டையைச் சேர்ந்த வாணி (வயது 20) என்ற இளம்பெண்ணே கால், கை, கழுத்து ஆகிய பகுதிகளில் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)

## போக்கறுப்பு கிராமத்தில் ஆடுவளர்ப்புக்கு உதவி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள போக்கறுப்பு கிராமஅலுவலர் பிரிவில் 12 வறுமைகோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கு ஆடு வளர்ப்புக்கு உதவ யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கான நடவடிக்கையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஈடுபட்டுள்ளது. இதற்கான கூட்டம் போக்கறுப்பு கிராம அலுவலர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக போக்கறுப்பு கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (17)

## விபத்தில் மாணவன் காயம்

(வடமராட்சி)

மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் தலையில் படுகாயம் அடைந்து, மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

.உடுப்பிட்டி பொதுச்சந்தைக்கு அருகாமையில் எதிரே வந்த காருக்கு இடம்கொடுக்கும்போதே இந்த விபத்து இடம்பெற்றது.இந்த விபத்தில் காயமுற்ற தங்கராசா ரேகன் என்ற உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவனே, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அரசியல் கருத்தரங்கு

தமிழர் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தினரால் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பான கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளை மாலை - 3 மணிக்கு நடைபெறும் இந்தக் கருத்தரங்கில், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் சகாயசீலன் 'சமகால, அரசியல் பற்றிய ஓர் பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

## நூலக சேவை நீடிப்பு

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான பிரதான நூலகம் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையே இதுவரை இயங்கிவந்தது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை செயற்படத் தொடங்கியுள்ளது. வாசகர்களின் நன்மை கருதி இவ்வாறு ஒரு மணித்தியாலம் நீடிக்கப்பட்டுள்ளதென நூலகர் வெ. வித்தியானந்தன் தெரிவித்தார். (37)

## தென்மராட்சியில் படையினர் திடீர் சோதனை

தென்மராட்சி பிரதேசத்தில் இராணுவத்தினர் திடீர் திடீரென வீதிச் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் மக்கள் மத்தியில் பெரும் அச்சநிலை தோன்றியுள்ளது.

நேற்று முன்தினமும் - மாலை வேளை கொடிகாமம் வரணிப் பகுதியில் வீதியால் சென்ற வாகனங்கள் யாவும் சோதனைச் சாவடிகளில் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

வாகனங்களில் வந்தோர்கள் வாகனங்களிலிலிருந்து இறக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, பீல்ட்பைக் இராணுவத்தினரும் மாலை வேளையில் தென்மராட்சிப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், தென்மராட்சி பகுதி மக்கள் பெரும் விசனமும், அதிருப்தியும் அடைந்துள்ளனர். (34)

# பாடசாலை மாணவர்களுக்கான சமாதான கல்விக் கருத்தரங்கு!

யாழ்.மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையக (கியுடெக்) சமாதான நிகழ்ச்சித்திட்டப் பிரிவினர் பாடசாலை மாணவர்களுக்கான சமாதானக் கல்விக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

தன்னையும் உலகையும் ஆக்கபூர்வமாக நோக்க மாணவர்களை வழிப்படுத்துவதுடன், அவர்களிடையே தோன்றும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அவசியமான அடிப்படை திறன்களை விருத்தி செய்வதையும் அடிப்படை சமாதான விழுமியங்களை மாணவர் மேலும் அறியச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கருத்தரங்கு நடைபெற்று வருகின்றது.

இவ்வகையில் ஏற்கனவே கருத்தரங்கு நடத்தப்பட்ட ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் எட்டு மாணவர்களை பாடசாலை அதிபர் மூலம் தெரிவு செய்து அவர்களுக்கான முழுநாட் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை மானிப்பாய் அந்தோனியார் ஆலய வளவிலுள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

## அரச ஊழியர்களுக்கான அடிப்படைக் கற்கைநெறி

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் அரச கருமமொழி திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள அடிப்படை சிங்களம், அடிப்படை ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளின் ஆரம்ப வைபவம் இன்று பி.ப. 2.45 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென, வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (34)

# பளை - முகமாலை பகுதிகளில் பெருமளவு டெங்கு குடம்பிகள்!

பளை மற்றும் முகமாலைப் பகுதிகளில் பெருமளவு டெங்கு நோய்க குடம்பிகள் காணப்படுவதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களும் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சுஜந்தனின் அனுசரணையுடன் வன்னி மாவட்ட பூச்சியியல் பகுதியினரும், பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து நடத்திய ஆய்வின் போதே, மேற்படி டெங்கு நுளம்புக் குடம்பிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும், பளை நகரப்பகுதியில் சில நிறுவனங்களால் வீசி எறியப்பட்ட ரயர்களில் பெருமளவு டெங்கு நோய்க்குடம்பிகள் காணப்பட்டதாகவும், இதனை அப்பகுதி பாடசாலை மாணவர்கள் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு காண்பித்ததுடன் இந்த நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்கும் இவை பெருகாமல் இருப்பதற்கும் எடுக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி கருத்துரை வழங்கப்பட்டது. (122)

# தொலைபேசி அழைப்புக்களை பெறுவதில் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கான தொலைபேசி அழைப்புக்களை பெறுவதில் மீண்டும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில் நெருக்கடி நிலை காணப்பட்டபோதிலும், பின்னர் அழைப்புக்களை இலகுவில் பெறமுடிந்தது. தற்போது அழைப்புக்களை ஏற்படுத்த முனையும்போது, தொலைபேசி சேவைகளில் நெருக்கடிநிலை நிலவுவதால், உங்கள் அழைப்பை தாமதமாக அழையுங்கள் என்னும் பதிவு செய்யப்பட்ட வசனத்தையே திரும்பத்திரும்ப கேட்கவேண்டியுள்ளது. அத்துடன், பாவனையிலுள்ள தொலைபேசி இலக்கங்களில் அழைப்புகளை ஏற்படுத்தும்போது, இந்த இலக்கம் தற்போது பாவனையில் இல்லையென்ற பதிவு செய்யப்பட்ட வசனமும் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இந்தச் செயற்பாடுகளினால் பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் தமது விசனத்தையும் தெரிவிக்கின்றனர். (111)


நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய்,ரம்பா, குஷ்பு நடித்த

மின்சாரக் கண்ணா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) (சி-1425)

STRATEGIC COMMAND

ராஜா யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டிராஜன் நடித்த

ராமச்சந்திரா

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

பதவி வெற்றிடம்

ஹைடில்பேர்க், பிளேற்றின் மெசினுக்கான இயந்திர இயக்குநர்கள், கட்டர் வேலை தெரிந்தோர் தேவை.

தங்குமிட வசதி செய்யப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

முடியரசி பதிப்பகம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

(493)

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து புலிகள் அரசிற்கு யோசனை முன்வைப்பு

## 'திவயின' பத்திரிகை தகவல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் - இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட்டு, ஐந்து வருடங்களுக்கொருமுறை இலங்கை அரசாங்கத்துடன் இணைவதா, இல்லையா என்பது பற்றி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு, விடுதலைப புலிகள் அரசாங்கத்திடம் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளனர் என்று திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது. இது மாதிரியான சர்வஜன வாக்கெடுப்பு கனடாவில் உள்ள கியுபெக் மாநிலத்தில் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்தத்திட்டத்தை விடுதலைப் புலிகள் அரசிடம் கையளிக்கப் படவுள்ள இடைக்கால நிர்வாக சபை வரைபிலே தெரிவித்திருப்பதாக இந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இறுதியாக அயர்லாந்து கலந்துரையாடலில் பின்பு, விடுதலைப் புலிகள் இந்த வரைபை அரசிடம் கையளிக்க இருக்கின்றார்கள்.

இந்த இடைக்கால நிர்வாக சபை அறிமுகப்படுத்தப்பட்டால், இலங்கை நாடாளுமன்றத்தில் இந்தச்சபை வேறொரு நாடாளுமன்றமாக இயங்கும் என்றும், அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# கண்காணிப்புக்குழு - முஸ்லிம்கள் சந்திப்பு இடம்பெறவில்லை!

திருமலை - குரங்குப்பாஞ்சான் பகுதியில் நெற்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு, நேற்று முன்தினம் கண்காணிப்புக் குழுவினரைச் சந்திக்கவிருந்த அப்பகுதி முஸ்லிம் குழுவினரின் சந்திப்பு இடம்பெறவில்லை.

மாறாகக் கண்காணிப்புக் குழுவினர் - இவர்களது பிரச்சினைகளைக் கடிதம் மூலம் எழுதித் தருமாறும், இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கதைத்த பின்னர், எதிர்வரும் ஆறாம் திகதி சந்திப்பதாகவும் தெரிவித்தனர்.

குரங்குப்பாஞ்சான் பகுதியில் இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும், அந்தப் பகுதியில் நெற்செய்கையினை மேற்கொள்வது தொடர்பாகவும் - விடுதலைப் புலிகளின் சம்மதம் இல்லாமல், திருமலை மாவட்ட அரச அதிபர் றொட்றிக்கோ அண்மையில் கிண்ணியா பிரதேச செயலகத்தில் கூட்டமொன்றை நடாத்தி, அதில் இந்தப் பகுதி நிலைமைகளை ஆராய 07 பேர் கொண்ட குழுவை நியமித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (04)

### மிலிந்த மொறகொட தலைமையில்

# இலங்கையில் முதலீடு செய்ய வொஷிங்ரனில் குழு அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்வந்துள்ள முதலீட்டாளர்கள் அடங்கிய குழுவொன்றை வொஷிங்ரனில் அமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான கூட்டம் ஒன்று நாளை வொஷிங்ரனில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் இடம்பெறவுள்ள இக்குழுவில் அமெரிக்க 30 முதலீட்டாளர்களை முதலில் இணைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த முதலீட்டால் நாட்டில் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான முயற்சிகளின் விளைவு குறித்து பௌத்தர்களுக்கு விளக்குவதற்கு திட்டம்!

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் நாட்டில் இடம்பெறவிருக்கும் விளைவுகள் பற்றி, இலங்கையில் உள்ள பௌத்தர்களுக்கும், உலகெங்கும் வாழும் பௌத்தர்களுக்கும் அறிவிக்கும் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "எகிய ரட்டயி சிஹல கண்டாயி" எனத் திட்டத்துக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் முதற்கூட்டம் இத்தாலியிலுள்ள மோதகா நகரத்திலுள்ள மைத்திரி விகாரையில் நேற்றுக்காலை 10 மணியிலிருந்து மாலை 4மணி வரை இடம்பெற்றது.

இத்தாலியிலுள்ள ஐக்கிய சிங்கள அமைப்பின் ஆதரவில் நடைபெறும் இந்தக்கூட்டத்தில் தேரர்களும் பங்குபற்றினர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் நாட்டைப் பிரிப்பதற்கு எதிராக இந்த அமைப்பு நிறுவப்பட்டதென்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்களப் பத்திரிகையொன்றின் ஆசிரியரான லால் கமகே, இக்கூட்டத்திற்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# பட்டாசு தொழிற்சாலையில் தீ

பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் - தொழிற்சாலை ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் குருணாகல பகுதியில் அமைந்துள்ள பட்டாசு தொழிற்சாலையில், பட்டாசு ஒன்றினைப் பரீட்சிக்க முற்பட்டபோதே, இப்பாரிய விபத்து ஏற்பட்டதாக அறியமுடிகிறது. இங்கு பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிந்துகொண்டிருந்த வேளையிலேயே, இந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும், எனினும், தெய்வாதீனமாக தொழிலாளர்கள் சிறுகாயங்களுடன் தொழிற்சாலையைவிட்டு வெளியேறிவிட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

### எதிர்க் கட்சி உறுப்பினர்களின்

# அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு; இவ்வாரம் விசாரணைக்கு எடுக்கப்படும்!

(கொழும்பு)

எதிர்க்கட்சியைச் சேர்ந்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்களால் முறையிடப்பட்ட மனித உரிமை மீறல் சம்பந்தமான குற்றச்சாட்டுகள் இந்தவாரத்தில் விசாரணை செய்யப்படும்.

பிரிட்டன், ஆபிரிக்கா, செக்கொசெலோவாக்கியா போன்ற நாடுகளிலுள்ள மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளால், இந்த மீறல்கள் விசாரிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழுத் தலைவராகக் கடமையாற்றும் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்த விசாரணைகளில் பங்கேற்க முடியாமலிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்த விசாரணைக்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவை அழைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நிமால் சிறிபால டீ சில்வா, மங்கள சமரவீர உட்பட பத்துப் பேர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

# இரசாயன கழிவுகளுக்கு தீ மூட்டியதில் மூன்று சிறுவர்கள் மயக்கமடைந்தனர்!

கொழும்பு மாதப்பிட்டியவில் உள்ள, இரசாயன கழிவுகள் கொட்டப்பட்டிருந்த பகுதி, விஷமிகளால் தீயூட்டப்பட்டது.

இதனால், இந்தப் பகுதியால் சென்றுகொண்டிருந்த மூன்று சிறுவர்கள் மயக்கமுற்றநிலையில், கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியில் சென்ற மக்கள் பலர், இரசாயன நச்சு வாயுவினைச் சுவாசித்ததன் விளைவாகப் பல உபாதைகளுக்கு உள்ளாகிய நிலையில, தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### பெரியபுராண படலம்

புன்னாலைக்கட்டுவன் - ஆயர்க்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் தொண்டர்தம் பெருமை கூறும் பெரியபுராண படலம் ஓதப்படுகின்றது. கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை காலை 8.30 மணிமுதல் 12.30 மணிவரை புராணபடலம் ஓதப்படுகின்றது. இந்த நிகழ்வில் பெருமளவு அடியார்கள் பங்குபற்றி வருகின்றனர். (83)

# குச்சவெளியில் மாடுகள் கடத்தப்பட்டதாக கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு!

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்திலுள்ள - கல்லம்பற்றை காட்டுப்பகுதியில், 80 மாடுகள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் - முகமது யரூஸ், ரசார்த்தீன் ஆகிய இரண்டு முஸ்லிம்களுக்குச் சொந்தமான மாடுகளே இவ்வாறு கடத்தப்பட்டவையாகும்.

இது தொடர்பாக உரிமையாளர்கள் - குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், நேற்றுமுன்தினம் திருமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடமும் இது பற்றித் தெரியப்படுத்தியதாக மாடுகளின் உரிமையாளர்கள் இருவரும் தெரிவித்தனர். (04)


# அடிப்படை வசதிகளின்றி தாளையடி பாடசாலை

வடமராட்சி கிழக்கு தாளையடி றோ.க.த.க.பாடசாலை அடிப்படை வசதிகளின்றி இயங்கிவருகிறது.

மேற்படி பாடசாலையில் தரம் 1 முதல் 9 வரையில் வகுப்புகள் நடைபெற்றுவருகின்றது. இப்பாடசாலையில் 93 மாணவர்களே கல்வி கற்று வருகின்றனர்.

மேற்படி பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடங்கள் பற்றாக்குறை ஆசிரியர் விடுதி இல்லாமை, விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.





கேணல் சங்கரின் உருவச்சிலையினை அவரது மனைவி திறந்துவைப்பதை முதலாவது படத்திலும், சங்கரின் உருவச் சிலைக்கு மூத்த தளபதி கேணல் பால்ராஜ் மலரஞ்சலி செலுத்துவதனை இரண்டாவது படத்திலும் காணலாம்.



கேணல் சங்கரின் நினைவாக வெளியிடப்பட்ட நூலை - அவரது மனைவி மூத்த தளபதி கேணல் சொர்ணத்திடமிருந்து பெற்றுக்கொள்வதனை மேலுள்ள படத்தில் காணலாம்.

## தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்

# படுகொலை சம்பவங்கள் தொடர்பான விசாரணை அடுத்தமாதம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனையில் தேர்தல் பிரசாரத்திற்குச் சென்றவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் படுகொலை செய்யப்பட்ட, சம்பவம் தொடர்பான, வழக்கு விசாரணை - அடுத்தமாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் தீவகத்திற்குப் பிரசாரம் செய்வதற்காக சென்ற ஆதரவாளர்களை ஈ.பி.டி.பி. எனக்கருதப்படும் குழுவொன்று, வழிமறித்துத் தாக்கியதால், அதரவாளர் ஏரம்பு எனபவர் கொல்லப்பட்டார்.

இவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, வழக்கு விசாரணை ஒன்று யாழ்நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையின்போது, 7 ஆம் சாட்சியான திருநாவுக்கரசு ரவந்திரன், 10 ஆவது சாட்சியான நவரட்ணம் கணேஸ்வரன், ஆகிய இருவரும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

மேற்படி கொலைச்சம்பவம் தொடர்பான, வழக்கு விசாரணையை மேற்கொள்ளமுடியாது என, ஊர்காவற்துறைப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து, மேற்படி சம்பவம தொடர்பான வழக்கு விசாரணையை, அடுத்தமாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான்- ஆர்.ரி.விக்னராசா அன்றைய தினம் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்குத் தயாராக வருமாறும் பொலிஸாருக்குப் பணித்தார்.

இந்தவகையில் சட்ட வரையறைக்கு அமைய கொலை சம்பந்தமான விசார்ணையை, ஒரு வருடத்திற்குள் முடிக்கவேண்டும்.

ஆனால், நாரந்தனையில் இடம் பெற்ற கொலைச்சம்பவம் - ஒன்றரை வருடமாக நடைபெற்றுள்ளதை சுட்டிக்காட்டிய நீதவான் - விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்றும் மன்றில் பொலிஸாருக்குத் தெரிவித்தார். (200)

# மின்சாரம், போக்குவரத்து வசதியின்றி மக்கள் சிரமம்

(மண்கும்பான்)

மின்சாரம் மற்றும் போக்குவரத்து வசதிகள் இன்றி, அல்லைப்பிட்டி மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த போராட்ட காலங்களின் பின்னர் - இன்னமும் இந்தப் பகுதிகளுக்கான மின்சாரமோ, போக்குவரத்துக்களோ ஆரம்பிக்கப்படவில்லை. உள் வீதிகள்கூட திருத்தப்படாமல் பெரும் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டுக்குள், யாழ். குடாநாடு வந்தபின்னர் யாழ்.மாவட்டத்தின் எத்தனையோ பிரதேசங்களுக்கு மின்சாரம், வீதி புனரமைப்பு, போக்குவரத்து போன்ற வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், தீவுப் பகுதியில் குறிப்பாக மண்கும்பான், அல்லைப்பிட்டி மக்களுக்கோ எந்தவித அபிவிருத்தியும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. குறிப்பாக - நெடுந்தீவு, வேலனை, ஊர்காவற்துறை போன்ற பிரதேசங்களுக்கு கூட, மின்சாரம், போக்குவரத்து என்பன இருக்கின்ற போதிலும்,

ஏன் இவ்விரு பிரதேசங்களையும் எவரும் கண்டுகொள்ளவில்லையென, மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 350 குடும்பங்கள் மண்கும்பானிலும், அல்லைப்பிட்டியில் 300 குடும்பம் வரையிலும் மீளக்குடியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (53)

### எழுவைதீவு பாடசாலைக்கு காணி கொள்வனவு

எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலைக்கு- ஆசிரியர் விடுதி அமைப்பதற்கு பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினரால் காணிகொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அண்மையிலுள்ள 21/2 பரப்புக்காணி 75,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (83)

# தணிகைமாறன் முன்பள்ளிக்கு தற்காலிக கொட்டகை அமைப்பு

(ஆழியவளை)

கடந்த ஒரு வருடகாலமாக மர நிழலில் இயங்கி வந்த கட்டைக்காடு தணிகைமாறன் முன்பள்ளி, கடந்த திங்கட்கிழமை தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு புனரமைப்பு நிறுவன உறுப்பினர் தலைமையில் நடைபெற்ற, இந்நிகழ்வில் கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் வே.புவனேந்திரராசா, முள்ளியான் உபதபால அதிபர் ஆகியோர், மங்கள விளக்கினை ஏற்றி வைத்தனர்.

வடமராட்சி கிழக்கு அரசியல் துறை மக்கள் தொடர்பாளர் யாழ் மன்னன் நாடாவினை வெட்டி முன் பள்ளியினைத் திறந்து வைத்தார். (122)

## சின்னஞ்சிறு செய்திகள்

### நல்லொழுக்கதினம்

வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி - நல்லொழுகக தினத்தைக் கொண்டாடவுள்ளது.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்த விழாவை முன்னிட்டு, அதற்கான ஒழுங்குகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு நல்லொழுக்கசபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### இந்து சமய அபிவிருத்தி நிர்வாகக்குழுக் கூட்டம்

இந்துசமய அபிவிருத்தி நிர்வாகக்குழுக் கூட்டம் - இன்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது எனச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# தீவகப் பாடசாலை மாணவர்களுக்கு பண்ணிசைப்போட்டி நடைபெறவுள்ளது

(புன்னாலைக்கட்டுவன்)

தீவகக்கல்வி வலயப் பாடசாலைகளில் கல்விகற்கும் சைவ சமய மாணவர்களை, சைவசமய சூழலிற்கு உட்படுத்தி, சமூகத்தில் இறையுணர்வுள்ள நல்ல பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் இப் பண்ணிசைப் போட்டி நடைபெறவுள்ளது.

பாடசாலை, கோட்ட வலய ரீதியாக, நடைபெறவுள்ள இப்போட்டி, பாலர்பிரிவு (தரம்2,3) ஆரம்பப் பிரிவு (தரம்4,5), கீழ்ப்பிரிவு (6,7) மத்திய பிரிவு (தரம்8,9) மேற்பிரிவு (தரம் 10,11) அதிமேற்பிரிவு என ஆறு பிரிவுகளாக இடம்பெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் முதலிரு இடங்களையும், பெற்றோர் அடுத்த கட்ட போட்டிக்குத் தகுதிபெறுவர். பாடசாலை மட்டப்போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட வேண்டும் என்றும், வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர்களை உடனடியாக அந்தந்தக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிகப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் வேலணைக் கோட்டப் போட்டிகள், எதிர்வரும் 11 ஆம் திகதியும், ஊர்காவற்துறை கோட்டப் போட்டிகள் 18 ஆம் திகதியும் நெடுந்தீவுக் கோட்டப் போட்டிகள் 25 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (83)

### கிளிநொச்சி வைத்தியசாலையில் குடிநீர் தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்ட, வைத்தியசாலையில், குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. வைத்தியசாலையில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் குறைந்துள்ளன. இதனால் வைத்திசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறுவோர் பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

# எழுவைதீவு கிராமத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அண்மைக்காலமாக சூழல் வெப்பநிலை மிக உயர்வாக இருப்பதாலேயே நீர் நிலைகளில் நீர் வற்றியுள்ளமையால், குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கு மாற்றீடாக, ஊர்காவற்துறைப் பிரதேசசபையினரால், தினமும் சாட்டியிலிருந்து குடிநீர் கொண்டுவந்து, விநியோகிக்கப்படுகின்றது.

அடிப்படைத் தேவைகளில் மிகப் பிரதனமான ஒன்றாக குடிநீர் விளங்குகின்ற போதிலும், இப்பகுதி மக்களுக்கு போதுமான அளவில் நீர் விநியோகிக்கப்படுவதில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (83)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஜீ.சமுத்ரா
முகவரி: ஸ்ரீ கணேசவாசம், வதிரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

# எழுவைதீவு தபாலகத்தில் தொலைபேசி ஸ்தம்பிதம்

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவு உப.தபாலகத்திலுள்ள தொலைபேசிச்சேவை, கடந்த ஒருமாதகாலமாக செயலிழந்துள்ளமையால், பாவனையாளர்கள், பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதுகுறித்து, இப்பிரதேச உப தபாலதிபர் ஊர்காவற்துறை தபாலகத்தில் முறையிட்டுள்ளபோதிலும், செயலிழந்துள்ள தொலைபேசிச் சேவையைச் சீராக்க, மேலதிகாரிகளால் உரிய நடவடிக்கை இது வரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால், இப்பிரதேச மக்கள் அதிருப்தி அடைநதுள்ளனர்.

அத்துடன், தொடர்பாடல் சாதனங்களில் முதன்மைவாய்ந்த சாதனமாகத் தொலைபேசி விளங்குவதனால், தற்பொழுது இப்பிரதேச மக்கள் தொலைத்தொடர்பு சேவைக்காக, ஊர்காவற்துறைக்குப் பயணம் மேற்கொள்ளவேண்டிய, நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மேலும், இத்தீவில் பொதுமக்கள் பாவனைக்குரிய ஒரேயொரு தொலைத்தொடர்பு நிலையமாக, இந்த நிலையமே செயற்பட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# எழுவைதீவுக் கருவாட்டுக்கு தென்பகுதியில் சந்தைவாய்ப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவில் கருவாட்டிற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலமாக, தென்பகுதி வியாபாரிகள் பலர் நேரடியாகவே வந்து கருவாட்டை மொத்தமாகக் கொள்வனவு செய்வதனாலேயே, இங்கு கருவாட்டிற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாரைக் கருவாடு ஒரு கிலோ - 110 ரூபாவிற்கும், விளைக் கருவாடு ஒரு கிலோ 80 ரூபாவிற்கும், திருக்கைக் கருவாடு கிலோ - 40 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் தற்பொழுது, பாரைக் கருவாடு கிலோ 225 ரூபாவிற்கும், விளைக்கருவாடு - 100 ரூபாவிற்கும், திருக்கைக்கருவாடு 80-90 ரூபாவிற்கும் மொத்தமாக விற்பனை செய்யப்படுகின்றது.

கருவாட்டின் விலையேற்றத்தால் இப் பகுதியில் மீனின் விலையும் அதிகரித்துள்ளது. இங்கிருந்து மீன்கள், நண்டுகள் தினமும் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

### குப்பிளானில் சணல் செய்கை

புன்னாலைக்கட்டுவன் - குப்பிளான் பிரதேச விவசாயிகள் சனல் செய்கையில், கடந்த வருடங்களைக் காட்டிலும் இவ்வருடம் கூடிய ஆர்வம் காட்டுவதனைக் காணமுடிகிறது.

கடந்தவருடங்களில் பசுந்தாற் பசளையான சணலைச் செய்கை பண்ணிய விவசாயிகள் - புயிர்ச் செய்கையில்கூடிய விளைவைப் பெற்றதன் காரணமாக சனல் செய்கையில் ஆர்வம் காட்டுவதாக அறிய முடிகிறது.

### இலங்கை தமிழாசிரியர் சங்க பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின், வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் - நாளை இடம் பெறவுள்ளது.

வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் இக்கூட்டத்தில், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்வண்ணம் வலய செயலாளர் சி.ராஜேந்திரராசா அறிவுத்துள்ளார். (17)

# இடம் பெயர்ந்தோருக்கான கொடுப்பனவு அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம் பெயர்ந்த மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு, மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் அனுப்பப்படாமையினாலேயே மக்களுக்கு வழங்க தாமதமடைகின்றது.

இது வரையான காலப்பகுதியில் கட்டம் கட்டமாக, ஒழுங்காகவே இக் கொடுப்பனவுக்கான நிதிகள் யாழ். செயலக நிகொட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் இந்த நிதி தற்போது சில மாதங்களாக, அனுப்பப்படாமையினால் நிதிக்கு சிபார்சு செய்யப்பட்டு எதிர்பார்த்திருக்கும் மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொடர் நாவல்

சூட்டதில்லை. இராசையம்மானின் சங்கெடுத்து வெற்றிச் சங்கூதுகிறார் வயித்தி. அவ்வளவேதான்.

அம்முறை ஆர்.வி.ஜி. பீடி கொம்பனி நடத்தின சவாரிப் போட்டி பினாக்கை வயல்வெளியில் நடந்தது. நெல்லறுத்த மணம்கூட போகவில்லை. கட்டைகள்கூட காயவில்லை. கரவெட்டியிலிருந்தும் காரைதீவிலிருந்தும், இன்னும் எஞ்சிய யாழ்ப்பாணத்தின் எல்லாக் கிராமங்களிலிருந்தும், சவாரிகள் வந்தன. காலையில் தொடங்கி எல்லாச்சுற்றுக்கும் போய், இறுதிச் சுற்றுக்குப் பின்னேரம்மட்டில் இராசையம்மானின் சவாரி வந்தது.

இராசையம்மான் நம்பின விடயங்கள் மூன்று. நரையனையும், கழுகனையும் நல்லா நம்பினார். அவைகள்தான் தொடர்ந்து ஒவ்வொரு வருசமும் வெற்றிகளைப் பெற்றுத் தருகின்றன. மூன்றாவதா வயித்தியை நம்பினார். இப்பிடி வெற்றிகளைப் பெற்றுத்தர வயித்தியைத் தவிர வேறை ஆராலை ஏலும்? நாலாவதா ஒண்டையும் நம்பினார். அது ஓலைப்பை. அவர்கையில் அது திரிந்தது. கமக்கட்டுக்குள் கிடந்தது அங்கினை இங்கினை என்றோ, மரத்தடியில் என்றோ மறந்தும் வைக்கவில்லை. வெற்றியின் சூட்சுமங்கள் அதற்குள் இருந்தன.

இரண்டு மூன்று சீப்பு வாழைப்பழங்கள் அழுகின பதத்தில் இருந்தன. ஒரு போத்தல் கள்ளச் சாராயம் இருந்தது. அஞ்சாறு லேகிய உருண்டைகள் இருந்தன. பிறகும் என னன்னவோ இருந்தன. போத்தல் யாருக்கு? லேகிய உருண்டைகள் எதற்கு? போத்தல் வயித்தியனுக்கு என்றுதான் சொல்கிறார். ஒரு போத்தலையும் வயித்தியாலை குடிக்க ஏலுமோ? அதுவும் உரும்பிராய் வடி. தோட்டக் கிணத்தடியிலை தணணிபோற வாய்க்காலுக்கை ஒரு வருசமா தாட்டுக்கிடந்த வடி. ஏலுமே, ஒராளாலை அதை முடிக்க? அந்தப் ஓலைப்பைக்குள் பெரிய மர்மம் இருக்கு.

இறுதிச் சுற்றுக்குச் சைலற்றை சவாரியும் வந்து சேர்ந்தது. அங்குதான் விளைந்தது ஆபத்து...! ஐயக்கோன் என்றால் கடும் போட்டியாகத்தான் இருக்கும். கைகலப்பு இருககாது. சுன்னாகத்திலை இருந்து வந்து, அளவெட்டியில, அளவெட்டியாரோடை சண்டித்தனம்விட ஏலுமே? ஆனால், சைலர் அப்படி இல்லையே? ஒரே ஊர்! இன்னும் சொல்லப்போனால் அயல் அயல் வீடுகள். எங்கு இந்தப் போட்டி முளைகட்டினதோ? இவ்வளவு மூர்க்கம் கொண்டதோ?

# சவாரி வீதி

அம்மாளைத்தானே கும்பிட்டார்கள் இருவரும். சவாரி வீதியும், உயனைப் பனங்கூடலும், பொன்னிப்புல வெளியும் என்று இருவரும் ஒரேஇடத்தில்தானே சவாரி ஓட்டப் பழகினார்கள். நெடுங் கண்ணித் தோட்டத்தின் மரக்கறிகளைத்தானே இருவரும் உண்டார்கள். ஒரு சொட்டும் உப்புக்கலவாத, செம்பாட்டு மண்ணின் ஊற்று நீர்தானே தாய்ப்பாலென இருவருக்கும் உவந்து ஊட்டப்பட்டது. எல்லாம் சரிதான். எங்கேயோ பிசகு நேர்ந்துவிட்டது. எங்கு? யாமறியோம் பராபரமே?

ஆயத்தக் கோட்டில் நின்றன சவாரிகள். பின்னரே வெயிலுக்குச் சவாரி மாடுகள் மினுமினுத்தன. நுரை கக்கிய மூக்குகளிலிருந்து, நுரையை வழித்தெடுத்து, மாடுகளின் முதுகில் தேய்த்தார்கள். மூக்கணாங்கயிற்றில்கூட வசீகரம் இருந்தது. புழுதி பறக்கத் தோதுவாய் நிலம் இருக்கவில்லை. மாரிகாலத்தில் பினாக்கைக் குளம். அதுவே கோடைக்கு பினாக்கை வெளி. நிலத்தில் ஈரத்தன்மை இல்லையெனினும், புழுதி பறக்குமளவுக்கு மண் உலரவில்லை.

இராசையம்மானின் சவாரி - சற்றுப் பின்தயங்கியது. மறநவை தூரத்தில் அரைவாசி கடந்துவிட்டன. கொகொய், என்று வயித்தி கத்தியபடி, நரையனினதும், கழுகனினதும் குண்டியில் குத்தூசியால் குத்தினான். இராசையம்மானின் சவாரிக்கு வந்த வேகத்தை எந்தப் பெயர் கொண்டு அழைப்பது என்று தெரியாது. மற்றையவை அரைவாசித் தூரம் கடந்தால்தான் என்ன. சவாரி, வயித்தியின் மூக்கணாங் கயிறு பிடித்த மூர்க்கத்தில் முதலாவதாய் முடிவுக்கோட்டைத் தொட்டது. எல்லோரும் ஆச்சரியப்படுவதுதான். சோம்பிக்கிடந்தன, எப்படி சுறுசுறுப்பாய் இந்த வேகத்தில் எழுந்து, பாய்கிறதே என்று!

இராசையம்மான் இங்கு பதகளித்து நிற்கமாட்டார். அவருக்கு நரையனையும் தெரியும், கழுகனையும் தெரியும், வயித்தியையும் தெரியும், வெல்லும் வகையும் தெரியும். பரிசு வாங்கப் போகமாட்டார். எல்லாம் வயித்திதான். விருதாக பீடிக்கட்டுக்கள் பணடல் பண்டல் ஆகக் கிடைத்தால் என்ன, தங்கப் பதக்கம் கிடைத்தால் என்ன, எல்லாம் ஒன்றுதான். வெல்லவேண்டும். 'இராசையனின் சவாரியை ஒருத்தராலும் வெல்லேலாது' என்று சொல்லவேண்டும். அவ்வளவுதான்! மரத்தின் கீழ் நரையனையும், கழுகனையும் தடவிக் கொடுத்து நிற்பார் இராசையம்மான்! இராசையம்மான் வீட்டிலை சவாரியை விட்டுவிட்டு ஐயனார்கோவில் வீதியால் நடந்து வந்தார் வைத்தி.

கட்டைக் கறுவலான சைலரும், அவரது இரண்டு மகன் மாரும் ஐயனார் கோயிலின் முன்னால் பத்தைப் பக்கம் நிக்கினம். நிற்கும்நிலை சரியில்லை. நெஞ்சை நிமிர்த்தி நின்றால் சரிதான். இது அதுவல்ல. வஞ்சம் தீர்க்க நிற்கும் நிலை அது! வயித்தி அதைக்காண்டார். என்ன செய்வது? திரும்பி ஓடுவது அழகா? வருவது வரட்டும் நடந்தார்.

'தூமை, மைச்சானா இருந்து கொண்டு, இரத்த உறவா இருந்து கொண்டு அந்த ... களுக்கு சவாரி ஓடிக் குடுக்கிறாய் என்ன?' சைலர் கத்தினார். கத்தும்போது குரல் கணீரென்றுதான் ஒலித்தது. கேரவில்லை. பிறகுதான் சைலரின் குரல் கேரிப்போகும்படியான காரியம் நடந்தது.

வயித்தி பேசாமல் நடந்தார். "விறுமதடியன் மாதிரிப் போறான் பார் - பொட்டையன்" சைலர் கத்தினார். வயித்தியை நோக்கி பாய்ந்து ஓடினார். கத்தி கைக்கு வந்தது.

வயித்தியும் கட்டைதான். கழுத்திலைவிழ இருந்த வெட்டை- கைகள் தடுத்தன. கத்தியைப் பிடித்துப் பறித்தார். சவாரியின் மூக்கணாங் கயிறு பிடிக்கும் மூர்க்கம் வயித்தியின் கையில் வந்தது. பாளைக் கத்தியில் பாய்ந்தது. வயித்தியின் மையமாய் நிற்க, கத்தி சுற்றிப் பறந்து சுழன்றாடியது.

வயித்தி சவாரி ஓடுகிறபோது, பக்கத்துச் சவாரியைப் பார்ப்பதில்லை. முடிவுக்கோட்டைப் பார்ப்பதில்லை. முடிவுக் கோட்டுக்கு அப்பால் நீண்டு, நெடுத்த ஒரு பனையை இலககு வைப்பார். அதன் வட்டை கண்கள் காணும். உயரே பார்ப்பதுதான் இலக்குக்கு உறுதி. இலக்கு நோக்கிப் பாய்வார். வெறி வேகம் கொள்ளும். வெற்றி கிட்டிவிடும்.

இப்போ மைச்சானைக் காணவில்லை. மருமக்களைக் காணவில்லை. வெறி ஒன்றைத் தவிர, வேறொன்றும் தெரியவில்லை. கத்தி பாய்ந்து விளையாடியது. விரலை வெட்டியது. கையை வெட்டியது. காற்றைக் கனதரம் வெட்டியது. கழுத்தை இரண்டு தரம் வெட்டியது. ஐயனார் பார்த்திருக்க அத்தனையும் செய்தார். ஒரு மகன் சவமாகிச் சரிந்தான். மற்றைய மகனும்? சைலரும் இரத்தம் பாய ஒழுங்கையில் கிடந்தனர். ஐயனாருக்குத் தெரியும். என்ன நடந்ததென்று! எவரில் பிழை என்று! கல்லாய் சமைந்திருந்தார்.

வயித்தி விளக்கமறியலில் விடப்பட்டார். இராசையம்மான் சொத்து விட்டார்.

சொந்தக்காரர்களிடம் கையேந்தி, வழக்குபேச, ஜீ.ஜீக்கு இலட்சம் இலட்சமாயக் கொட்டினார். முற்றுப்பேசின, வயித்தியின் மகளுக்கு கலியாணம் முடித்து வைத்தார். ஜீ.ஜீ. வழக்குப் பேசுவதால் பிசகில்லை என்று தெரிந்தது.



தொண்டை அறுபட்டதில் சைலர் - கேரிக் கேரி தாங்கள் அய்யனார் கோயிலடியால் வந்தபோது தங்களைக் கண்ட வயித்தி துரத்தி, துரத்தி வெட்டினதாகச் சாட்சி சொனனார். ஒரு கையால் அமத்தி, மற்றக்கையால் வெட்டி, பிறகு வெட்டுக்காயத்தில் வயித்தி மண்ணள்ளிப்போட்டார் என்றும், தான் அதைக் கண்டதாகவும் சைலரின் சொந்தக்காரி சாட்சி சொன்னா. ஜீஜீ முறைத்துப் பார்த்து, குறுக்குக் கேள்வி கேட்டு, பிறகு 'மூன்று கைகளுள்ள மனிதரை நான இதுவரை கண்டதில்லை. நீதிபதி, நீங்கள் கண்டீர்களா? என்று நீதிபதியைப் பார்த்துக் கேட்டார். நீதிபதி சிரித்தார். நீதிமன்றம் சிரித்தது. வழக்கு தள்ளுபடியாகும் என்று இந்தச் சிரிப்பு சொன்னது. கதிர்காமத்தானுக்கு நடையிலைவாறன் என்று வயித்தி வைத்த நேர்த்தி வீண்போகாது என்று இந்தச் சிரிப்பு சொன்னது.

ஆனால், வழக்குத் தள்ளுப்படவில்லை. கதிர்காமக் கந்தனுக்கு நடக்கிற நாட்கள் ஐந்து வருசத்துக்கும் மேலாக வயித்திககுக் கிட்டவில்லை. அத்தனை வருசங்களும் சிறையில் கிடந்தார். தீர்ப்பு வழங்குகிற நாளன்று - தொகுப்புரை சொல்ல ஜீ.ஜீ. வரவில்லை. சைலற்றை ஆட்கள் காசு கட்டி ஜீ.ஜீயை வரவிடாமல் பண்ணிப் போட்டாங்கள் என்று ஊர் கதைத்தது. வயித்தியின் வீடு வளவும் வெறிச்சோடிப் போயிற்று!

இராசையம்மான் சோர்ந்து போனார். இந்த வழக்கால்தான் சோர்ந்து போனான் என ஒருவரும் நைக்கக்கூடாது என்று, பிறகு பஞ்சனை வைத்து- நரையன், கழுகனை நம்பி சவாரி ஓடினார். வென்றார். தங்கப்பதக்கம் கிடைத்தபோது கோட்டைக்கு கொண்டு போய்க் வயித்திக்குக் கொண்டுபோய் காட்டிப் போட்டு, வயித்தி வீட்டிலை கொண்டுபோய்க் கொடுத்தார். வயித்தி குடும்பத்துக்கு சிலவுக்குக் காசு குடுத்து பார்த்து வந்தார். ஆயினும், இராசையம்மான் சோர்ந்து போனார். அம்மாள் கோயில் மடத்துக் குந்தில் சோம்பிக்கிடப்பார். கண் ஒளிர ஒரு பீடி அடிப்பார். கச்சல் புகை வர, பீடியைச் சுழட்டி எறிந்துவிட்டு, துவாயை விரிச்சு, கைகளை தலைக்கு வைச்சு, வானம் பார்ப்பார்.

அப்பாவின் தாயினுடைய இளையதம்பி- இராசையம்மான், எனக்கு இராசையப்புவா மாறினாப்பிறகு, அவர் சவாரி ஓடினவராய் எனக்குத் தெரியவில்லை. புத்துக்குள் கை வைத்து பாம்மைக் கழுத்தாங்குத்தியில் பிடித்து, உதறிச் சாகப் போட்டவராய் எனக்கு இராசையப்புவைத் தெரியவில்லை. மடத்தில் குந்துபவராய் செருமித்திரிபவராய், காறித்துப்புவராய், எரிச்சலாய் கதைப்பவராய்தான் எனக்குத் தெரிந்தார். அவர் சிரித்து நான் கண்டதில்லை. அம்மாள் கோயில் திருவிழாவுக்கு எனக்கு ஐஸ்பழம் வாங்கவோ, கடலை வாங்கவோ, மடியைத்திறந்து ஒருசதம் எடுத்துத் தந்ததில்லை. ஆனால், மடத்தடி அத்தையின் குமரன் "இராசையப்பு எனக்கு அஞ்சு சதம் தரமாட்டீங்களோ?" என்று கெஞ்சுவான். அவர் குடுப்பார். இராசையப்பு எனக்க் காசு தராட்டிக்கூட பரவாயில்லை. எனது பேய்த்தனத்தையும், ஏமலாந்தித் தனத்தையும் பார்த்து, உன்னையும் அருணாசலம் பெத்தது என்று நையாண்டியாய்ச் சொல்லி, நக்கலாய்ச் சிரிப்பார். அதுதான் அவரை எனக்கு பிடிக்காமலே போனது.

இராசையப்பு - இராசையம்மானாய் இருந்த காலக்கதையே நான் சொல்லி வந்தேன். சவாரி வீதியில் சவாரிப் போட்டி நடந்த காலக்கதை அது. மூத்தம்மான், இராசையம்மான், சைலர் சின்னத்தம்பி, தலைவாசல் இளையதம்பி இவர்கள் பெரும் சவாரிக்காரர்களாக விளங்கிய காலம் அது. சவாரி வீதியின் தெற்குப்பக்கமாய் அப்பா காணி கண்டார் என்று சொன்னேன். அந்தக் காணியின் சரி நடுவில் ஒற்றைப்பனை நின்றது என்று சொன்னேன். சவாரி வீதியில் அம்மாளும், வைரவரும் சந்திக்கிற இடத்தில் ஒரு சம்பவம் நடந்தது என்று சொன்னேன். அந்தச் சவாரி வீதியில்....

சொல்கின்றேன் ஒரு கதை!

அந்தமுறை சிதம்பரப்பிள்ளை அப்பா உடுக்கடிக்கவில்லை. துரைச்சாமி அய்யா உடுக்கடித்தார். அய்யாத்துறை அப்பா கரகம் தூக்கவில்லை. கிருஷ்ணசாமி அய்யா கரகம் ஆடினார். ஐயாத்துரை அப்பா - சிவராசண்ணைக்குக் கரகம் பழக்கினார். அவரது ஆண்மக்கள் குலேசேகரம் அண்ணையும், சிவபாத அண்ணையும் கரகம் தூக்கச் சம்மதிக்கவில்லை. அய்யாத்துரை அப்பாவுக்கு அது பெருங்கவலை! எல்லா வேகமும் சிவராசண்ணையிடம் வந்தது. ஒரு அம்மாள் கோயில் குளிர்த்தி நாள். அன்றுதான் சிவராசண்ணை சனங்களுக்கு முன்னால் கரகம் தூக்கி தலையில் வைத்தார். வேர்க்க, விறுவிறுக்க என்ன ஆட்டம் அது. சிவராசண்ணையின் கண்கள் சுட்டது போல், பங்குனி வெயில் அப்படிச்சுட்டதில்லை. அவரதுகண்கள் சிவந்ததுபோல், நெருப்பும் அப்படிச் சிவந்ததில்லை.

எங்கள் அம்மாள் எத்துணை பாக்கியம் செய்தவள். அய்யாத்துரை அப்பா, கிருஷ்ணசாமி அய்யா, இப்ப சிவராசண்ணை இவர்களின் கரகம் காண்கிறாள். சிதம்பரப்பிள்ளை அப்பா, துரைச்சாமி அய்யா, இவர்களின் உடுக்குக் கேட்கிறாள். நாகலிங்க அண்ணாவியாரின் கூத்துப் பார்க்கிறாள். பத்மநாதனன்ணை, சிதம்பரநாதனன்ணை, பாலகிருஷ்ண

## இலக்கியச்சோலை

னண்ணையின்ரை நாதஸ்வரத்தில் லயிக்கிறாள். தட்சிணாமூர்த்தியண்ணை, குமரகுரு அண்ணை, சின்னக்கணேசன்னை என்று தவிலில் திளைக்கிறாள். சிவபாதமண்ணையின் மிருதங்கத்தில் மோனம் கொள்கிறாள். பார்வதியக்காவின் "நீயே கதி ஈஸ்வரி" என்கின்ற பாட்டில் மயங்குகிறாள். கருணை வழிய, புன்னகை சிந்தி எல்லாவற்றையும் பார்க்கிறாள், கேட்கிறாள், பரவசம் கொள்கீறாள்.

பேந்தொன்றைச் சொல்லமறந்தேன். சின்னத்துரையண்ணையின் சிகரக்கட்டும், செல்லையாண்ணையின் சப்பரக் கட்டும், விசுவயாப்பாவின் சாத்துப்படிக்கட்டும், சின்னம்மானின் காவடிக்கட்டும் - எங்கள் அம்மாளை இன்னும் இன்னுமென்று அழகு செய்தது. அந்த அழகுத் தெய்வத்தின் உயிர் கொல்லும் புன்னகையை எப்போதாவது ஒருபோதில் கண்டீரா நீர்? நான் கண்டேன்!

அவள் பார்க்கவும், கேட்களும், இரசிக்கவும், சுவைக்கவும் - அய்யாத்துரை அப்பா கரகம் ஆடினார். மகன் குலசேகரம் ஒன்றுக்கும் உதவாதவனாய், பெரிய மீசை வைத்துத் திரிந்தான். சிவபாதமாவது மிருதங்கம் பழகினான், கலக்கினான். குலசேகரம் தன் ஒல்லியான நெடுத்த உடம்பில், ஒடுங்கிய முகத்தில் பெரிய மீசை வளர்த்தான். இன்னொன்றும் அவனிடம் வளரந்தது, அப்படியும் சொல்லக்கூடாது. அம்மாள தன்னிடம் உள்ள ஒன்றைக் குலசேகரத்திடம் கொடுத்தாள். கொடுக்கவேண்டிய காலம்அது.

தென்னிலங்கையில் தமிழர்கள் அழிக்கப்படுகிறார்கள். தமிழ்ப் பெண்களின் பிறந்த மேனியில் கொதிதார் கொண்டு சிங்கள சிறீ எழுதப்படுகிறது. இவ்வளவும் நிகழ, இங்கு சிங்கள இராணுவம் குசாலாகத் திரிகிறது. குலசேகரத்துக்குக் கொதிப்பு உயர்ந்து வந்தது. பலாலி இராணுவ முகாமிலிருந்து காரைதீவு கடற்படை முகாமுக்குச் சிங்கள இராணுவம் எதுவித பயமுமின்றி இந்தச் சவாரி வீதியில் செல்கிறது. குலசேகரம் பல்லு நெருமி அதைப் பார்த்தான்.


அவரது நெருங்கிய உறவுகள் யாரும் இந்தக் கலம்பகத்தில் பாதிக்கப்பட்டார்களோ நான் அறியேன். இன்னொன்றையம், நான் அறியேன். அவருக்கு எப்படித் துவக்குக் கிடைத்தது? எப்படி அதைச் சுடப்பழகினார்? என்பதும் எனக்குத் தெரியாது. குலசேகரமண்ணை பற்றி மேலும் எநதச் சித்தரத்தையும் கீற என்னால் முடியவில்லை. பிற்காலத்தில் ஒருமுறை வேபபமரத்தில் கள்ளுவடித்து, ஒரு குட்டிப் போத்தலில் அதைக் கொண்டு திரிந்து, எல்லோருக்கும் காட்டி, "கொஞ்சம் குடிச்சாலும், கசிப்பு மாதிரி நல்லா ஏத்துது. பயங்கரக் கச்சல்" என்று சொன்ன சித்திரம் என்னுள் உண்டு. வேறு சித்திரம் ஏதுமில்லை. அந்த ஒல்லியான நெடுத்த உடம்பில் இத்தனை ஓர்மம் இருந்ததா? அந்தப் பெரிய மீசைக்குள் இததனை கோபம் இருந்ததா? என்கிற ஆச்சரியங்களே என்னுள் அப்போது இருந்தது. காரைதீவுக்குப்போகப் பலாலியிலிருந்து ஆமி ஜீப் -சவாரி வீதியில் வருகிறது. அப்பா செயகைபண்ண இருந்த தோட்டக் காணியின் ஒன்றைப் பனையில் குலசேகரம் அண்ணை துவக்குடன் ஏறி இருக்கிறார். அம்மாள் கோயிலிலிருந்து வைரவர் கோயில் வரையான சவாரி வீதி - குலசேகரம் அண்ணையின் கண்ணுக்குள்! ஜீப்பைக் காண்கிறார். சரியான இடம்வர, தருணம் பார்க்கிறார். துவக்கிலிருந்து சர்ரென்று சீறி எழுந்தது முதற்குண்டு! அது றைவருக்கு. ஜப் தடுமாறி பனையுடன் மோதுண்டது. ஜீப்பினுள் நாலோ ஐந்தோ ஆமிதான்.

**இரவி அருணாசலம்**

அத்தனைபேரும் சரியும்வரை குலசேகரம் அண்ணையின துவக்கிலிருந்து குண்டுகள் பாய்ந்தன. சுட்டு இராணுவத்தை வீழ்த்தியபிறகு, குலசேகரம் அண்ணை துவக்கை நெஞ்சில் சரித்து, நிமிர்ந்த, நேரான நடைகொண்டிருப்பார் என்று எனக்குத் தெரிகிறது. அம்மாள் கொடுத்த வீரம் அப்படித்தான் செய்யும். பிறகு பலவருட காலமாக, எனக்குத் தெரிய, 71 ஏப்பிரலில் சேகுவேரா கிளர்ச்சி வரை சவாரி வீதியை இராணுவத்தினர் பயன்படுத்தவில்லை. அப்போதும் கூட சவாரி வீதியில் ஜீப் வருகிறதுபோது, இராசையம்மானின் சவாரியிலும் பார்க்க மிகவேகமாக ஓடி மறைந்துவிடும்.

போக இலண்டன் டெய்லி ரெலிகிராப் (Daily Telegraph) பத்திரிகை நிருபர் ஸ்ரீபன் பாபர் "தமிழர்களின் முதற் பழிவாங்கும் சம்பவம் இது" என்று இந்த நிகழ்வை வர்ணித்தார். நான் இனிக் கதையை முடிக்கிறேன். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அப்பாவால் நீண்ட நாட்களுக்குச் சவாரி வீதியில் எதுவும் செய்ய இயலவில்லை. கீரிமலையை விட்டு அப்பாவால் வெளிக்கிடவே முடியவில்லை. அளவெட்டிப் பக்கம் இப்போதைக்குப் போக வேண்டாம் என்று அம்மா சொல்லி விட்டா. கனநாளைக்கு அளவெட்டிச் சோளகத்தை விட்டு கீரிமலைக் கடற்கரை காற்றை அப்பா சுவாசித்தார். என்னையும் மறந்தனையோ? என்று அம்மாள்தான் அப்பாவைக் கோபித்தாள். செல்லமாய் அது ஒரு சின்னக் கோபம்!

(முற்றும்)



# பண்பாடுயரப் பாடு!

பண்பாடு போய்த்தான் பலகாலம் ஆயிற்றே,
நண்பா அதற்கிப்போ நாமென்ன செய்யிறது!
கோயில் வீழாவால் அமளிப்படுகிறது
வாயில் அலங்காரம் மாவிலை தோரணம்,
கண்ணைப் பறிக்கின்ற மின்சாரம் சோடித்த
வண்ண விளக்கு வரிசை, ஒலிபெருக்கி
உச்சத் தொனியில் உரப்ப, ஒருமாதம்
நித்திரை இல்லாது தவிக்கும் நிலை – எங்கள்
பண்பாடு இந்தப் பகட்டில் இருக்கிறது...
கள்ளச் சாராயம் 'கசிப்பு' என்ற பேரதற்கு
மெள்ள விரிந்து தொழிலாகி விட்டதடா
கத்தி எடுத்தொரு கண்ணில்லாப் பாவி, தான்,
பெற்ற மகனுயிரைப் பறிக்கும் கொடுமையினை
பத்திரிகை நாலைந்து பத்தியிலே போடுகுது!
"நல்லூரில் ஐம்பதுபேர் நகைகள் பறிகொடுத்தார்
கள்ளரிடம்!" இந்தக் கதையும் வருகிறது!
பட்டும் திருந்தோம்; காது கழுத்துக்கை–
முட்ட நகைபோட்டு முருகன் அருள் பெறுவோம்!
வன்முறைக் காளாகும் பெண்கள்தாம் எத்தனைபேர்!
சின்னஞ் சிறுசுக்கும் பாதுகாப்பில்லை – ஒரு
பொல்லா விலங்கதனைக் கடித்துக் குதறிடலாம்!
எல்லாம் முடிந்தபின்பு குத்தியோ வெட்டியோ
கொன்றொழிக்கக் கண்டும் குரலெடுக்க மாட்டாது
நின்றிருக்கும் நாம் பிறகு பண்பாட்டை நினைப்பானேன்?
மேனாட்டுடை, அதுவும் அரைகுறையாய்;
ஆட்டுவிக்கும் மேனாட்டிசை;
அர்த்தம் ஆகாத பாட்டுக்கள்;
தழுக்கி மினுக்கித் தமிழைச் சிதைத்து
உடலைக் குலுக்கி ஒரு கூத்து – அதனைக்
கொண்டாடக் கோடி சனம்!
பண்பாடு போய்த்தான் பலகாலம் ஆயிற்றே
நண்பா அதற்கிப்போ நாமென்ன செய்யிறது?
மணி மூன்றென்றாலோ தொலைக்காட்சிமுன்
மகளிர் அணியொன் றமரும்
அது சொல்லி மாளாது!
மாளிகை போல் வீடு; வழுக்கிப்போம் கார்,
கூர்க்கா ஆளணிகள், செல்போன்,
மிழற்றும் அரம்பையர்கள்,
கனவுலகம் பட்டப் பகலில் விரியும்
நம் நினைவதற்குள் நீளும், நிலங்கள் மறந்துபோம்!
மாமியரும் வாய்த்த மருகியரும் மோதுகையில்
ஆமி புலிகூட அருகில்வர ஏலாது!
சின்னத் திரையில் சிவகாமி உருகி அழ
பொன்னுத் துரையின் தாய், மனைவி, மகள் ருக்ஷி
கண்கள் நீர் மல்க, கசிந்து கசிந்துருக,
என்னத்தைச் சொல்ல! எவர்க்காய் அழுவது நாம்!
பண்பாடு போய்த்தான் பலகாலம் ஆயிற்றே
நண்பா அதற்கிப்போ நாமென்னசெய்யிறது?
'ஷம்பூ'வின் முன்னே தலைவணங்கி நிற்கின்றோம்,
'விம்'பூசு கின்றோம் புளி சாம்பல் விட்டுவிட்டோம்!
பிளாஸ்டிக் பூ, மாவிலையும் தோரணமும் பிளாஸ்டிக்கே
பிளாஸ்டிக்கில் தட்டு, கரண்டி, பிறபொருள்கள்!
ஒற்றைக் கடுக்கன், ஒருதோளி லேகமறா,
கற்றைச் சடை, முழங்கால் மூடக் காற்சட்டை
நல்லூரான் வீதி நடைபயிலக் கண்டியளோ?
எல்லாப் புகழும் ஏறைநனுக் காகட்டும்!
எங்கே இதுபோய் முடியும்? எம்மக்களது
அங்க அடையாளம் தவிர, அனைத்துமே
அச்சாறாய்ப் போக, அடுத்த தலைமுறை
அச்சா எனத்துள்ளி ஆர்ப்பரிக்கப் போகிறது!
பண்பாடு போய்த்தான் பலகாலம் ஆயிற்றே,
நண்பா அதற்கிப்போ நாமென்ன செய்யிறது?

**சோ.பத்மநாதன்**



# எங்கே! புரட்சிசெய்!

நண்பனே!
உன்னை உணர்
உலகை விரும்பு
வாழ்க்கை வனப்பில்
வழுக்கிப் பார்!

நிமிடம் கரைந்து
செயலில் ஊற்று
விழிக்கும் வரையில்
எல்லாம் இருட்டு
துணிந்து விட்டால்
திசைகள் உனக்கு

தூக்கம் சுருக்கி
செயலை விரி
அறிவைத் தேடி
அகலப்பற
எரியும் நெருப்பாய்
இலட்சியம் கொள்!
இன்றே துணிந்தால்
வாழ்க்கை உனக்கு

வீர நகர்வுக்கு
நங்கூரம் எதற்கு?
அடிமைச் சொல்லின்
அர்த்தம் எரி
நீ!
நின்றுவிட்டால்
காலம் உன்னை
கருக்கிவிடும்
புரட்சிக்கு
பூ மாலை எதற்கு?

நீ!
இடிகளை இறக்கும்
வானம் உன்னால்
வெயிலை
சுட்டெரிக்க முடியும்
வயலை
வாழ்விக்க முடியும்
இன்னொரு பொழுதுக்காய்
இருப்பதை இழக்காதே!

உன்னால்
வேதத்தையே
படைக்க முடியும்
விவேகத்தை
விதைக்க முடியும்

எழுந்துநில்!
உனக்கு
இரவுகள் தேவையில்லை

இன்னொரு
சுடுகிரகம் பற்ற
உன்னிடம்
தீக்குச்சியா இல்லை

எழுந்துநில்!
இருப்புகள்
உனக்கானவை

மேகத்துக்குள் சுருங்கிய
மழைத்துளியாய்
உனக்குள் ஒடுங்கிய
உணர்வுகளை தட்டிவிடு

நீ!
பருவம் மீறிப்
பெய்யும் மழையல்ல
வானம்!
தனக்கென்று எதையும்
பொத்தி வைத்ததில்லை
இயற்கை!
தன்னிடம் எதையும்
மறைத்து வைக்கவில்லை
நீ மட்டும்
ஏன்?
ஆற்றல்களை
புதைத்து வைத்திருக்கிறாய்

ஜீவனுக்குள்
புல்லரிப்பு
தேடல்கள் நிறைக்கட்டும்


இது!
முகவரி பொறிக்கும்
காலம்
முறுக்கேறிய
முள்ளந்தண்டால்
அடுப்பு தாதே!

இது!
உன்னைச்
செதுக்கும் பருவம்
சிதைத்துவிடாதே!
தீட்டிய
வாளுக்குத் தீனி
போர்க்களம்!

எங்கே!
உனக்கான விடியல்
ஒரு புரட்சிசெய்!

**கு.ரஜீபன்**

# கவிதைச்சோலை



# மெய்யுறவு

ஒன்றென்றால் வந்து உதவ ஒரு நாதியற்ற
அன்று...
உனைப் பிரிதல் மரணத்திலுங் கொடிது
என்றுன் அங்கிருந்தேன்.
எறிகணைகள் மிக அருகில்...
வீழ்ந்து வெடித்து அயலை உருசிக்கையிலும்,
போர்... 'கட்டை அறுத்து'வந்தெம்
புலவுகளை மேய்கையிலும்,
வாழ்ந்திருந்த சுற்றம் மழைக்கால எறும்புகளாய்ப்
போகையிலும், தெருக்கள் புழுதி தனைக்கிளற
ஆளற்று வாடையிலும்,
அண்ணாந்து வெறித்தபடி...
ஏதோ ஒரு துணிவில் இருந்தேன் நான் உன்னோடு!
நானுனக்குத் தெம்பூட்ட,
நீ எனக்குத் தெம்பூட்ட
சாவை இருவருமாய் மாறிமாறித் துரத்திநின்றோம்.
அன்றெமக்கு ஆதரவு செய்ய
எவருமில்லை.
வந்து விழிதுடைத்துக் காயத்தில் மருந்திட்டு,
உண்ண ஒருகவளஞ் சோறு தருவதற்கோ....
கண்ணுறங்கும் போது காவலுக்கு நிற்பதற்கோ...
"அஞ்சற்க" சொல்வதற்கோ
எவருமற்ற அனாதையானோம்.
இன்றுனக்கு எண்ணற்ற உதவுந் திருக்கரங்கள்
"உன்துணைக்கு நாம்" என்று
உவந்து வந்து சேர்ந்தன நீ
புண்பட்ட வேளை - விட்டுப் போனவைகள்.
கவர்ச்சி பொங்க,
வண்ணங் குலுங்க, வடிவொளிர, நாகரீகம்
மின்னப் பல'புதிர்கள'அவர்கள் அளவளவாவப்
புன்னகைத்துச் சிரிக்கிறாய்!
"நீயும் பகட்டுகளின்
பின் - பழசை மறந்ததாயோ" பேச்சிழந்து நான் நிற்க
இடைக்கண்ணால் எனைப்பார்த்துக்
கண்ணீர் துடைக்கின்றாய்.

**த.ஜெயசீலன்**

# கிழக்கும் மேற்கும்

## ஒளவையார் - சோக்கிரட்டீஸ்

ஞானம் பொலிந்த
ஞானப் பேச்சால்
ஞானியின் பேச்சால்
ஈர்க்கப் பெற்ற
கிரேக்க இளைஞர்கள்
ஞானியின் பின்னால்
திரண்டனர் கடலென।
ஆள்வோர் இதுகண்டு
அச்சமும் பொறாமையும்
சீற்றமும் கொண்டனர்।
"அரசினை எதிர்த்தும் –
இளைஞர் மனங்களில்
துர்மதி புகட்டியும் –
அரசுக்கு எதிராக
இளைஞரைத் தூண்டியும் –
தெய்வ வழிபாட்டிலும்
தவறுகள் விளைத்தும் –
செயற்படுகின்றீர்" என
ஞானிமேல் ஆள்வோர்
குற்றம் சுமத்தினர்॥
நீதி மன்றின் முன்
நிறுத்தினர் ஞானியை॥

**முருகு.**



சுமத்தப்பட்டுள்ள
குற்றங்கள் பற்றி
விளக்கம் தரும்படி
ஞானியைப் பணித்தது
நீதிமன்றம்।
முதலிரு குற்றச்சாட்டிலும்
நிறைந்துள்ள நியாயத்தை
விளக்கிக் கூறியவர்
"இறை வழிபாட்டில்
தவறியதில்லை।
அதிலெந்தத் தவறேதும்
விளைத்ததுமில்லை" –
என்றர் ஞானி...
உள்ளத் தெளிவுடன்।
உண்மைத் தொனியுடன்॥
"நீதியாய் நடக்கின்ற
நானேன் எவர்க்கும்
பயப்பட வேண்டும்?
பணிந்திட வேண்டும்?" –
என்றெண்ணி ஞானி
மன்றினைச் சிறிதும்
கருத்திற் கொள்ளாது
அலட்சியமாயவர்
நின்றார் மன்றினில்।
சிறிதள வேனும் தம்மை
மதித்திடவில்லை யென்று
ஞானியின் மீதில்
கோபம் கொண்ட
மன்றத்தவர்கள்
மதித்திடா ஞானியின்
மன்னுயிர் பறித்திடும்
மரண தண்டனையை
விதித்தனர் ஞானிக்கு।

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பற்றுஅற்றேம் என்பார் படிற்றுஒழுக்கம் ஏற்றுஎற்றுஎன்று ஏதம் பலவும் தரும்.*

- திருக்குறள்.

## நமது நோக்கு

### கவலைக்குரிய விடயம்

கடந்த ஒருவாரகாலமாக யாழ்.பல்கலைக்கழக வளாகப் பகுதிக்குள் சிரேஷ்ட மாணவர்களுக்கும் கனிஷ்ட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதல்கள், சமூகப் பொறுப்புமிக்க கல்விசார் சமூகத்தவரை மிகவும் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது.

ஒரு தேசத்தின் எதிர்காலத்தை- அரசியல், பொருளாதார, அறிவியல் மற்றும் சமூக ரீதியில் நிர்ணயிக்கும் ஆற்றல் பல்கலைக்கழக மாணவர்களுக்குத்தான் அதிகமுண்டு என்ற கருத்தில் எவரும் முரண்பட்டது கிடையாது.

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு பல்கலைக்கழகம் புகும் மாணவர்களை அவர்களின் பெற்றோர்கள் மட்டுமல்ல, அவர்கள் வாழும் சமூகமும், நாடும்கூட பெரும் நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பது வழக்கம்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளான மாணவர்களின் எதிர்கால உயர்வு பற்றியும், அவர்களின் உயர்வினால் தாங்கள் பெறப்போகும் கௌரவம் பற்றியும், அந்த கௌரவத்தின் அடிப்படையில் தமது கஷ்டத்திற்கும், வாழ்வியல் நெருக்கடிகளுக்கும் கிடைக்கப்போகும் விடியலைப் பற்றி கற்பனை செய்கிறார்கள். கனவு காண்கிறார்கள்.

அது அவர்களின் இயல்பு.

ஒரு நாடும், அதில் வாழும் சமூகமும், அந்த சமூகத்தினதும் நாட்டினதும், முக்கிய அங்கமான மாணவ சமுதாயம் குறித்து அதீத எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கையையும் வைப்பதென்பதும், அந்த நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் அமைய தாம் கற்ற கல்வியால் கல்விசார் பண்பாட்டால் மேன்மைகளையும், பெருமைகளையும் பெற்றுக்கொடுக்கும் மனோ உறுதியுடன் தமது கற்கை நெறிகளை தொடர வேண்டுமென்பதும்கூட, இயல்பான விடயமேயாகும். ஆனால் இந்த இயல்புகள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினராலும் பொறுப்புணர்வுடன் புரிந்துகொள்ளப்பட்டுள்ளதா என்பதே இப்போதுள்ள சந்தேகமும், வினாவுமாகும்.

பல்கலைக்கழகப் பிரவேசம் என்பது ஒரு மாணவனுக்கு மிகச்சுலபமாக கிடைக்கக்கூடிய ஒன்றல்ல. அதுவும் இலங்கையில் மிகவும் கடினமான முயற்சியின் விளைவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றேயாகும். அதுவும் தமிழனாகப் பிறந்த ஒருவனுக்கு அலாவுதீனுக்கு கிடைத்த அற்புத விளக்குப் போன்ற ஒன்றேயாகும். இதனை எந்த ஒரு மாணவனும் - அதுவும் பல்கலைக் கழகத்துக்குத் தேர்வான ஒவ்வொரு மாணவனும் அறிவு மற்றும் ஆக்க பூர்வமாக உணர்ந்தே இருப்பர்.

அந்தத் தேர்வில் வெற்றிபெற ஒவ்வொரு மாணவனும், அவனது பெற்றோரும் அவனுக்கு கற்பித்த ஆசிரிய சமூகத்தவர்களும் அவரவர் பொறுப்பை உணர்ந்து எவ்வாறெல்லாம் கடின உழைப்பை மேற்கொண்டிருப்பார்கள் எனபதையும், எவருக்கும் எவரும் விளக்கவேண்டிய அவசியமும் இல்லை. இப்படி எத்தனையோ கஷ்ரங்கள், நெருக்கடிகள் அனைத்தையும் எதிர்கொண்டு கடின உழைப்பின்மூலம் எதிர்காலம் குறித்த இலட்சிய இலக்குடன் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள், பல்கலைக்கழக பிரவேசம் கிடைத்ததும் தாம் கடந்துவந்த பாதையையும், தமது கடமைப் பொறுப்பையும், சொந்த இலட்சியத்தையும் மறந்து தம்மை அசாதாரண புருஷர்களாக நினைத்து - தமது சுற்றுச்சூழலை, சமூகத்தை, சகமாணவரை, தேசத்தை நிராகரித்து 'கதாநாயகத்தனம்' காட்ட முனைவதுதான் பரிதாபத்திற்கும், பரிகாசத்திற்கும் உரிய விடயமாகும்.

ஏற்கனவே பகிடிவதை என்ற பெயரிலான இறக்குமதி கலாசாரம், எமது பண்பாட்டின் சீரழிவின் அடையாளமாக உயர்கல்வி அமைப்புகளில் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம், மாணவ சமூகத்தைச் சார்ந்த சிலரது வக்கிர உணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதால், பாதிப்புக்குள்ளாகும் அப்பாவி மாணவர்களின் பட்டியல் மிக நீளமானது. அதில் பலர் - பல்வேறு உளவியல் தாக்கங்களுக்கும் ஆளானமை, காலங்காலமாக உணரப்பட்டே வந்துள்ளது.

நமது கல்விசார் சமூக ஒழுக்கப்பாட்டின் அறிவுசார் கலாசாரத்தின் பிரதிநிதிகளாக, கௌரவத்திற்குரிய அடையாளங்களாகத் திகழவேண்டிய பல்கலைக்கழக மாணவ சமூகம், அடிதடியில் இறங்குவதும் சந்திச் சண்டையில் ஈடுபடுவதும், ஆரோக்கியமான அவர்களின் எதிர்கால உயர்வையும், பெருமையையும் பாதிக்கவே செய்யும்.

பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகத்தாலேயே இடைநிறுத்தம் செய்யப்படுவதும், விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும் அவர்கள் எத்தகைய அறிவாற்றல் மிக்கவர்களாக இருந்தாலும், சமூகச் சீரழிவின் பங்காளர்களாகவே அவர்களை இனங்காட்டும் என்பதில் ஐயமில்லை.

அறிவுசார் மாணவ சமூகம், தேசத்தின் எதிர்கால வரலாற்றை உருவாக்கும் மகோன்னத சக்தியெனின் - அந்த சக்தி அடிதடியில் இறங்கும் அவல நிலைக்குள் இறங்குவதை எவரும் எந்தநிலையிலும் அனுமதிக்கவும்கூடாது. மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கவும் கூடாது. இந்த விடயத்தில் கடினமானதும், உறுதியானதுமான நடவடிக்கை எடுக்கவேண்டியது பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

கலைக் கழகங்கள், கொலைக் கழகங்களாக மாறுவதை பார்த்துக்கொண்டிருந்தால், ஒரு மோசமான தலைமுறையின் உருவாக்கத்திற்கு ஆதரவு அளிப்பதாக அமைந்துவிடும்.

சம்பந்தப்பட்டவர்கள் - பொறுப்புடையவர்கள் - தீர்க்கமாக இது விடயத்தில் முடிவு எடுக்கவேண்டிய நேரம் இதுவாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி: படையினர் எந்த நேரத்திலும் தயார் நிலையில் இருக்க வேண்டும்..................... சந்திரிகா.

# புலிகளின் இடைக்கால நிர்வாக சபை நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல்!

## சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கூறுகிறார்

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்காகக் கையளிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை - நாட்டின், சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாகும்.

இவ்வாறு - முன்னாள் சட்டத்தரணிகள் சங்கத் தலைவரான எச்.எல்.டி.சில்வா தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நாட்டின் அரசியலமைப்புக்கு வெளியே ஏற்படுத்தினால், தற்போது நாட்டிலுள்ள சட்ட ஒழுங்குகள் செயலற்றதாவதுடன் - இடைக்கால நிர்வாக சபை மூலம், சட்டரீதியற்ற அரசை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்திவிடும் இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்கினாலும், அதன்பின் அவர்களால் நாட்டிற்கு வரும் ஆபத்துக்களைத் தடுப்பதற்கு பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் - தவறாக வழிநடத்தப்பட்ட சிலர், நாட்டில் நடைபெறும் விடயங்களின் உண்மைத் தன்மை பற்றி எதுவும் அறியாதவர்கள். இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டுமெனக் கூறும் இவர்கள், அதன் பின் நாட்டிற்கு ஏற்படப்போகும், ஆபத்தினை அறியாதவர்கள். அத்துடன் இவர்கள் தற்போதுள்ள அரசியல் யாப்பினையும் மாற்ற வேண்டுமெனவும், அறியாத்தனமாகக் கூறுகிறார்கள்.

தற்போதுள்ள அரசியல் அமைப்பினை இறுக்கமானதாக மாற்ற வேண்டுமெனவும் இவர் கூறுகிறார். அத்துடன் அரசியல்வாதிகள் எடுக்கும் தீர்மானங்கள் நன்றாக ஆராயப்படுதல் வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்க தமிழ்க் கூட்டமைப்பு நடவடிக்கை!

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குவது தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பினர் மலையக அரசியல்வாதிகளையும், தமிழ்க் குழுக்கள் சிலரையும் ஒன்று சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக சிங்களப் பத்திரிகை செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்பிரகாரம் கடந்தவாரம், தமிழ்க் கூட்டமைப்பினரால், புளொட் அமைப்பைச் சேர்ந்த ரி.சித்தார்த்தன், மலையக நாடாளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் அழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டார்களென அந்தப் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவது சம்பந்தமாக அரசாங்கத்துக்கு காலக்கெடு கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது என்று அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், கலந்துரையாடலில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்காததால், எதிர்வரும் 7 ஆம் திகதி அவர்களையும் அழைத்து தீர்மானம் ஒன்றை எடுக்கவிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஆர்.சம்பந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராசா, என்.ரவிராஜ், கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைக்கக்கூடாது!

## பிக்குமார் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு - விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குமானால், நாட்டின் இறைமைக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் கையளிக்கக்கூடாது என, பிக்குமார் சங்கம் தீர்மானித்துள்ளது.

பிக்குமார் சங்கத்தினர் - இடைக்கால நிர்வாகத்தை அரசு வழங்குவதற்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கை தொடர்பாக நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கூடி ஆராய்ந்தனர். தேசிய சங்க சபை என்ற பிக்குமார் சங்கத்தின் தலைவர் வெல்லாவெல மெத்தானந்த தேரர் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் கலந்துகொண்டனர்.

பௌத்த மதம் தற்போது அழியும் நிலையிலிருந்து வருகின்றது. மிகவும் தொன்மைவாய்ந்த பௌத்த மதத்தை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். மதத்தின் தொன்மையை என்ன விலைகொடுத்தும் அரசாங்கம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துவது எனவும்,

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால், நாட்டின் இறைமை பாதிக்கப்படுவதுடன் தொன்மைவாய்ந்த பௌத்தம் அழிந்துபோய்விடும். எனவே, விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டாம் என வலியுறுத்துவது என்றும், தீர்மானிக்கப்பட்டது. (01)

# 30 விதவைகளுக்கு சுய தொழில் கடன்

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் 30 விதவைகளுக்கு சுயதொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் தாக்குதலால் கணவனை இழந்த விதவைகள் 20 பேருக்கு தலா 15,000 ரூபாவும், இரு பயனாளிகளுக்கு 25, 000 ரூபாவும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பயனாளிகள் இந்த நிதியைக்கொண்டு சுய தொழில் முயற்சியில் ஈடுபட்டு தமது குடும்பத்தை வாழவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# ரணிலின் அரசை வீழ்த்துவதற்கு சந்திரிகா என்ன செய்யப்போகிறார்

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான அரசியல் அதிகாரப்போட்டி வரவரக் கூர்மையடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

பரஸ்பரம் இருவரையும் குற்றஞ்சாட்டி, முன்னர் அடிக்கடி பேசிவந்த இருவரும், இப்போது ஒரு கடிதப் போரை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இந்தப் புதிய போர்க்களத்தை முதலில் விரித்தவர் ஜனாதிபதி சந்திரிகா தான். மிகக் குறுகியதூர வித்தியாசத்தில் தமது வாசல் ஸ்தலங்களைக் கொண்ட இருவரும், தமக்கிடையிலான சூடான விவாதங்களை கடிதம் மூலம் நடாத்தும் ஒரு உத்தியை முதலில்



தொடக்கி வைத்தவர் சந்திரிகாதான்.

அதையும் முழு உலகும் அறிந்து கொள்ளும் வகையில், ஊடகங்களுக்கும் அம்பலப்படுத்தி வந்தார் சந்திரிகா.

இவ்வாறு தனிப்பட்ட கடிதங்களை ஊடகங்களுக்கு அம்பலப்படுத்தும் சந்திரிகாவின் நடவடிக்கையை கண்டித்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், தானும் வேறு வழியில்லாமல் - தனது பதில் கடிதங்களை ஊடகங்களுக்கு வழங்க வேண்டியேற்பட்டுள்ளதாகவும் முன்னர் ஒரு பொழுதில் குறிப்பிட்டிருந்தார்.

எது எப்படியோ, மிகவும் சுவாரஸ்யமான ஒரு அரசியல் அதிகாரப்போட்டி அரங்கேறும் விதத்தை மக்கள் அடிக்கடி ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

அத்தோடு கூடவே, நாட்டின் மிகவும் பொறுப்பு வாய்ந்த இரண்டு பதவிகளில் இருப்போரின் பொறுப்பற்ற தன்மைகளையும், பரஸ்பரக் குற்றச்சாட்டுகளின்மூலம் நாட்டு மக்கள் அறிந்துகொள்ள முடிவது இதன் மற்றுமோர் சிறப்பம்சம்.

இந்த மடல் போரின் மிகப் பிந்திய ஒரு கானம்ம் இந்தவாரம் நடந்து முடிந்திருக்கிறது. திருகோணமலையில் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அக்கறையீனமாக இருப்பதாகக் குறிப்பிட்டு, இவ்வார முற்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

மிகநீண்ட இந்தக் கடிதத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்த ஜனாதிபதி சந்திரிகா - இவற்றின் காரணமாக, அரசியலமைப்பின் பிரகாரம் தமக்கிருக்கும் அதிகாரங்களை, தான் பயன்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டதாகவும் எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

விடுவாரா ரணில். என்மீது குற்றம் சுமத்துகிறீர்களே, பாதுகாப்பு விவகாரத்தில் நீங்கள் உங்களுடைய ஆட்சிக்காலத்தில் என்ன பெரிதாகக் கிழித்து விட்டிருந்தீர்கள்? என்பது போல ஒரு பதில் மடலை எய்துவிட்டிருக்கிறார் அவர்.

இந்தப் பதில் மடலில் - சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில், வடக்கு-கிழக்குப் போர் முனைகளில் படையினர் சந்தித்த பல தோல்விகளையும் பட்டியலிட்டுக் காட்டித் தோலுரித்திருக்கிறார் சந்திரிகா. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், சிறிலங்கப் படை இறுதியாகப் போர்க்களத்தில் பயன்படுத்தியிருந்த மல்ரி பரல் பீரங்கிக் குண்டுகளைப்போல, பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் சந்திரிகா மீது ஏவப்பட்டுள்ளன. நீங்கள் ஜயசிக்குறுவில் தோற்றதென்ன, முல்லைத்தீவில் மண்கவ்வியதென்ன, பூநகரி போனதென்ன, ஆனையிறவும் போனதே?, கடைசியாக யாழ்ப்பாணத்தை விட்டு ஓடிவர இந்தியாவிடம் உதவி கோரியதுதான் என்னே, கடைசியாக எல்லாம் கடந்து கட்டுநாயக்காவுக்குள் புலி போனது எப்படி? என்றெல்லாம் பட்டியலிட்டு சந்திரிகாவை ரொம்பவும் தான் நோகடித்துவிட்டார் ரணில். இதோடு விட்டாரா? அட சண்டையில் மாண்ட எங்கள் படையினரின் உடல்களைக்கூட பொறுப்பேற்காமல், விட்டு நீங்கள் செய்த கொடுமைதான் என்ன? என்றும் வாங்கியிருக்கிறார் அவர். திருகோணமலையில் பாதுகாப்புப் பற்றி அலறுகிறீர்களே, உங்களுடைய ஆட்சிக்காலத்திலல்தானே சம்பூரிலுள்ள படையினரை வாபஸ் வாங்கி, புலிகள் அங்கு நிலைகொள்ள வழி செய்தீர்கள் என்றும் ஒரு போடுபோட்டிருக்கிறார் ரணில்.

இருந்தாலும், இப்படிச் செய்திருக்கக் கூடாது ரணில். இத்துடன் சந்திரிகா எழும் பாதபடி, திரும்ப ஒரு கடிதம் எழுதமுடியாதபடி செய்கிறேன் பார் என்பதுபோல வாங்கித் தள்ளியிருக்கிறார். நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களை இப்படி ஊடகங்களுக்கூடாக பகிரங்கமாக விவாதிக்க வேண்டாமே என்று ஒரு ஆலோசனையையும் விடுத்திருக்கும் ரணில், தேசிய பாதுகாப்பு விவகாரங்களை, இப்படி அரசில் ஆதாயம் தேடும் நோக்குடன் பயன்படுத்த வேண்டாம் என்றும், ஒரு மேலதிக அட்வைஸ் கொடுத்திருக்கிறார்.

எப்படியோ, இரண்டு பேரினதும் அரசியலதிகாரப்போட்டி - இரண்டு பக்கப் பொட்டுக்கேடுகளையும் அம்பலப்படுத்தத் தொடங்கிவிட்டது. மக்கள்பாடு படு கொண்டாட்டம் தான்.

சிறிலங்காவின் பிரதான இரண்டு கட்சிகளில் ஒன்றும், தற்போதைய எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சியுமான சிறிலங்கா சுதந்திரக்கட்சி - பல்வேறு துண்டுகளாகப் பிளவுபடும் அபாயத்தை எதிர்கொண்டிருக்கிறது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில், மாறிமாறி ஆட்சி புரிந்துவந்த இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், தனித்து ஆட்சியமைக்கும் பலத்தை இழந்து, தற்போது கூட்டு முன்னணிகளையே நம்பியிருக்கும் நிலையில், தற்போது ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணியான ஐக்கிய தேசிய முன்னணியை - பதவி கவிழ்க்கும் வகை தெரியாது, பொதுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டமைத்துள்ள சுதந்திரக் கட்சி திண்டாடுகிறது.

2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்த நிலையிலுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பலப்படுத்தும் எண்ணத்துடன், ஜே.வி.பி. யுடன் கூட்டமைக்க முயன்று, தோற்றுப் போயுள்ள சுதந்திரக்கட்சி- தனித்துத் தேர்தலில் தம்மால் வெற்றிகொள்ள முடியாது என்ற மனநிலையில் தடுமாறுகிறது.

ஜே.வி.பி.யுடன் கூட்டமைக்கவேண்டும் என்று அரும்பாடுபட்ட அனுரா பண்டாரநாயகா, மங்கள சமரவீர, கதிர்காமர் போன்றோர் கூட்டின்றி ஆட்சியில்லை என்று - கலங்கியபடி இருக்க, இந்த மனநிலையைக் கைவிடுமாறு தற்போது ஜனாதிபதி சந்திரிகா சுகந்திரக்கட்சி உறுப்பினர்களுக்குக் கடுமையாகக் கூறியிருக்கிறார்.

நாட்டின் பிரதான பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பான, ஒரு கொள்கையளவிலான இணக்கப்பாட்டுக்குக்கூட வரமுடியாது என்று அடம்பிடிக்கும் ஜே.வி.பி.யுடன், கூட்டமைக்க முடியாதநிலையிலிருக்கும் ஜனாதிப்தி சந்திரிகா- தற்போது ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து உறுப்பினர்களை விலைக்குவாங்கி, பலத்தை அதிகரிக்கத் திட்டமிடுள்ளதாகத்



தெரிகிறது.

இந்த நோக்கத்துடனே, அண்மையில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவை ஜனாதிபதி அழைத்துப் பேசியிருந்தபோதிலும், சந்திரிகாவுடன் வந்து பேசிய டிரோன், பேசிய கையோடேயே பிரதமர் ரணில் விக்கரமசிங்கவைச் சந்தித்து அதன் விவரங்களை அம்பலப்படுத்திவிட்டார்.

இது இப்படியிருக்க, சுதந்திரக் கட்சியிலிருந்து சில உறுப்பினர்கள் - ஐக்கிய தேசிய முன்னணியின் பக்கம் சாயும் அறிகுறிகளும் தென்படத் தொடங்கியுள்ளன.

முன்னாள் கல்வியமைச்சரான சுகந்திரக் கட்சியைச் சேர்ந்த ரிச்சர்ட் பத்திரன - அநேகம் அடுத்து வரும் நாட்களில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்துகொண்டு விடுவார் என்ற ஊகங்கள் அடிபடுகின்றன.

இவர் இவ்வாறு சேரும் பட்சத்தில், அவரது பாதச்சுவடுகளைப் பின்பற்றத் தயாராக இன்னும் பல சுகந்திரக்கட்சி உறுப்பினர்கள் காத்திருப்ப தாகவும் தகவல்கள் கசிகின்றன.

எவ்வளவு நாட்களுக்குத்தான் சும்மா வெறும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பது என்று இவர்கள் சலித்துவிட்டார்கள் போலும். ஆட்சியிலிருந்தால்தானே சுருட்டல்களும், சுகபோகமும் சாத்தியமாகும்.

# மக்களின் இலகு போக்குவரத்துக்கு

இன்றைய காலகட்டத்திலே ஒவவொரு மனிதனுக்கும் ஒவ்வொரு தேவையுள்ளது. அந்தத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்கு, பாடசாலை மாணவர் முதல், பல்லுப்போன பாட்டன்வரை அனைவருமே பலமைல் தூரம் பயணஞ் செய்யவேண்டியுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்கள், மருத்துவமனை செல்லும் நோயாளர்கள், கடமைக்குச் செல்லும் அலுவலர்கள், அரச, தனியார் நிறுவனங்களுக்குத் தமது தேவையை நாடிச் செல்லும் மக்கள், தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தச் செல்லும் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், தமது அன்றாட தேவைப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் மக்கள் என - அப்பப்பா தினமும் எததனைவிதமான மக்கள், எத்தனை விதமான நோக்கங்களுடன் பயணஞ் செய்கின்றனர்.

தினமும் எத்தனையோ விதமான அவசர, அவசிய தேவைகள் ஏற்பட்டு, அதனை நிறைவேற்றுவதற்கென ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பயணஞ்செய்யும் பயணிகளுக்குரிய பொதுப் போக்குவரத்துச் சேவையை, யாழ்.குடாநாட்டில் வழங்கிவரும் நிறுவனங்கள் இரண்டு.

ஒன்று - அரசிற்குச் சொந்தமான வடபிராந்திய போக்குவரத்துச்சபை. இரண்டாவது - தனியாருக்குச் சொந்தமான சிற்றூர்திச் சேவைச் சங்கங்கள். இவை போக்குவரத்துச் சேவையினைச் சீராக, வசதியாகச் செய்கின்றனவா என வினவினால், விடை நிச்சயமாக இல்லை.

பொதுமக்களுக்கான போககுவரத்துச் சேவையை நடாத்தம் இரு நிறுவனங்களுமே குறிப்பிட்ட சில வீதிகளில் மட்டும் ஒருசில சேவைகளை மட்டுமே நடாத்துகின்றன. இதனால், மேற்படி வீதிகள் தவிர, ஏனைய இடங்களில் வதிவோர் - குறிப்பிட்ட அந்த வாகனப்போக்குவரத்து வீதிக்கு வருவதற்குச் சில சமயம் 5,6 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்க வேண்டியுள்ளது. அத்துடன், குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் சேவை நடத்துவதால், தான் விரும்பிய இடத்திற்கு, தனக்குத் தேவைப்படும் நேரத்திற்கு அந்த இடத்தைச் சென்றடைய முடியாமலுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைப் பொறுத்தவரையில், போதியளவு பஸ்கள், சாரதிகள், நடத்துநர்கள் இல்லை என்ற பழைய பல்லவியையே திரும்பத் திரும்பப் பாடியபடி தனது சேவைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொண்டு வருகின்றது. இதனால், காலையில் அலுவலகங்கள், பாடசாலைகள் போன்வற்றுக்குச் செல்வோரும், மாலையில் வீடுதிரும்பி வருவோரும் மிகுந்த சனநெருக்கடியான சூழலில் பயணஞ்செய்து வருகின்றனர்.

தனியார் சிற்றூர்திகளைப் பொறுத்தவரையில்- சேவையை நோக்கமாகக் கொள்ளாது, தமது இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றன போலத் தெரிகின்றது. ஆகக்கூடியது எத்தனை பயணிகளை ஏற்றமுடியுமோ, அத்தனை பயணிகளை ஏற்றிச்செல்லவே முற்படுகின்றனர். சாதாரண உயரமுடைய ஒரு மனிதன் - நிமிர்ந்து நிற்கவே முடியாதளவு உயரத்தைக் கொண்ட சிற்றூர்திகளே பெரும்பாலும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதால், அதிகளவில் ஏற்றப்படும் பயணிகள் குனிந்தும், வளைந்தும், இடிபடும் வேதனை சொல்லுந்தரமற்றது. அது மட்டுமன்றி, ஏறும்வரை ஐயா, அம்மா, அக்கா என அன்போடு அழைத்து ஏற்றம் நடத்துநர்கள்- உள்ளே ஏறியவுடன் வார்த்தைப் பிரயோகங்களால் அடையும் மனவேதனை மறுபுறம் வாட்டும்.

அதுமட்டுமன்றி, அவ்வப்பகுதி தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கங்களால் கட்டண விபரங்கள் அடங்கிய பட்டியல்கள், ஒவ்வொரு (மினி பஸ்) தனியார் சிற்றூர்தியிலும் ஒட்டப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு நடத்துநரும் ஒவவொரு கட்டணத்தையே அறவிடுவது கவனிக்கக்கூடியதாக உள்ளது. இச்செயற்பாடு வடபிராந்திய போக்கு வரத்துச்சபை நடத்துநர்களுக்கும்- குறிப்பாக ஒரு வழித்தடத்தில் சேவைக்கு வரும் நடத்துநர்களுக்கும் பொருந்துவதாக உள்ளது.

போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பின்வரும் நடைமுறைகள் பேணப்பட வேண்டி

# எப்போது வழி பிறக்கும்

யது அவசியமாகும்.

1. 1995 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்ததுபோல, தனியார் சிற்றூர்திகளிலும் பயணச்சீட்டு வழங்கப்படல்வேண்டும்.

2. அளவுக்கதிமாகப் பயணிகளை ஏற்றிச்செல்லும் தனியார் சிற்றூர்தி உரிமையாளரிடம் - அதேயிடத்தில் தண்டப்பணம் அறவிடப்படல் வேண்டும். தொடர்ந்து 3 தடவைகள் அவ்வாறு செய்யப்பட்டால் அனுமதி இரதது செய்யப்படல்வேண்டும்.

3. மதுபோதையில் கடமை புரியும் சாரதிகள், நடத்துநர்களை உடன் பதவிநீக்கம் செய்யவேண்டும்.

4 தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, வடபிரதேச தனியார் போக்குவரத்துச்சபை ஒன்றை உருவாக்கி, அனைத்து சிற்றூர்திகளையும் தமக்குச் சொந்தமாகுதல் வேண்டும். இவ்வமைப்பு ஒரு கூட்டமைப்பு ஆகையால், வாகனத்தையோ, வேறு எதனையோ முதலீடு செய்பவர்கள் அனைவரும் பங்காளராகக் கணிக்கப்பட்டு, வருடலாபத்தில் இலாபப்பங்கு வழங்கப்படல்வேண்டும். நடத்துநர்கள், சாரதிகள் மற்றும் அலுவலர்களை நிரந்தரமாக நியமித்து, அவர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்கப்படல் வேண்டும். இதன்மூலம் மேலதிகமாகப் புதிய வாகனங்களை கொள்வனவு செய்பவர்களை ஊக்குவித்து, அவர்களையும் இணைத்து, மேலதிக சேவைகளை மக்களுக்கு வழங்க முடியும். அனைத்து வழித்தடங்களிலும் 15 நிமிடத்திற்கு ஒரு சேவையை நடத்துவதன்மூலம் சன நெருக்கடியைக் குறைக்கமுடியும்.

5. நடத்துநர்கள், சாரதிகளுக்கு மக்களுடன் எவ்வாறு இன்முகமாய்ப் பழகுவது என்பது பற்றிக் கருத்தரங்குகள் நடத்தப்படல் வேண்டும்.

6. பாடசாலைச்சேவை, அரச அலுவலகர்களுக்கான சேவை எனத் தனியான சேவைகளை நடாத்துவதன்மூலம் மக்கள் மனதில் வரவேற்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. வடபிராந்திய போக்குவரத்துச்சபை நடாத்தும் பாதைகளோடு மட்டும் நின்றுவிடாது, மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற முக்கிய வீதிகள் அனைத்திலுமூடாகப் புதிய புதிய சேவைகள் அறிமுகப்படுத்தல் வேண்டும்.

8. பருவகாலப் பயணச் சீட்டு நடைமுறையை அறிமுகப்படுத்துவதன்மூலம் மேலதிக நன்மைகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

9. குறிப்பிட்ட எண்ணிக்கையான பயணிகளை மட்டும் ஏற்றிச் செல்வதனை கட்டாய நடைமுறையாக்க வேண்டும்.

10. நீண்டதூர சேவைகள், குறுந்தூர சேவைகள், இடைப்பட்ட




செய்திக் கட்டுரை

தூர சேவைகள் எனச் சேவைகளைப் பாகுபடுத்தி நடாத்துவதன் மூலம் சனநெருக்கடியைக் கட்டுப்படுத்தலாம். சேவையில் ஈடுபடும், தூரத்திற்கேற்ப பயணத்தில் ஈடுபடும் வாகனத்தின் வசதியைத் தீர்மானிக்க வேண்டும்.

இத்தகைய நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு, தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தினர் முன்வரவேண்டும். தனிய்ார் போக்குவரத்துச் சேவையை நிறுவனமயப்படுத்தி, சீரான சேவையை நடாத்துவதற்கு- இச்சேவையில் அனுபவமுள்ள துறைசார் நிபுணர்களது நிபுணத்துவ சேவையும், வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களினது நிதியுதவியையும் நாடலாம். தங்களது சுயலாபத்தை மட்டும் கருத்திற்கொள்ளாது, மக்கள் தேவையை நிறைவேற்றும் சேவை மனப்பான்மையுடன் சிறந்த போக்குவரத்துச் சேவையைசெய்ய, சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா?

செ.சுதாகரன்

# நேபாளத்தில் தீவிரவாதிகள் போர்நிறுத்தத்துக்கு இணக்கம்




நேபாளத்தில் - மாவோயிஸ்ட் தீவிரவாதிகள், இந்துக்களின் விழாவையொட்டி தற்காலிகமான போர்நிறுத்தமொன்றிற்கு உடன்பட்டுள்ளார்கள்.

அரசியல்வாதிகளினதும் பொதுமக்களினதும் வேண்டுகோளுக்கிணங்க- ஒக்ரோபர் 2 ஆம் திகதியில், ஆரம்பித்து 9 நாட்கள் வரையான காலத்தில் போர்நிறுத்தமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அந்தக் குழுவின் தலைவர் பரச்சன்டா தெரிவித்தார்.

அரசாங்கம் தமக்கெதிரான தாக்குதல்களைத் தொடர்ந்தால், தாம் எந்த நேரத்திலும் மீண்டும் போரைத் தொடரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சென்ற மாதம் - அரசுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுகள் முறிவடைந்ததில் இருந்து இதுவரை 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கம் போர் நிறுத்தத்தை ஆதரித்தாலும், பதிலுக்கு போர்நிறுத்தம் ஒன்றை அறிவிக்கப்போவதில்லை என, தகவல் அமைச்சர் 'கமால் தப்பா' தெரிவித்தார்.

மேலும், தீவிரவாதிகள் பலமிழந்து விட்டதாகவும், அரசாங்கம் இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டதாக - பி.பி.சி செய்தியாளர் டானியல் லாக், காட்மண்டுவில் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டில் நேபாளத்தில் மன்னர் ஆட்சி அகற்றப்படவேண்டும் என, தீவிரவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் - இதுவரை 8 000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஆப்கானியச் சிறுவர்கள் அடிமைகளாக விற்பனை



வெளிநாடுகளுக்கு கடத்திச்செல்வதற்காக சிறைப்பிடிக்கப்பட்டிருந்த 85 சிறுவர்களை, ஆப்கான் அதிகாரிகள் மீட்டுள்ளார்கள். இவர்களில் 4 வயதுச் சிறுவர்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'படக்சானின்' வடபாகத்தில் அமைந்த மாகாணத்தில் - தெருவொன்றில் பிரயாணம் செய்த வண்டியொன்றை நிறுத்திய பொலிஸார் 50 சிறுவர்கள் கடத்திச் செல்லப்படுவதை அவதானித்தாகவும், அவர்கள் அடிமைகளாக விற்பனை செய்வதற்காகவே கடததிச் செல்லப்படுகின்றார்கள் என்பதையும், அறியமுடிந்ததாகவும் தெரிவித்தனர்.

இந்தக் கடத்தல் தொடர்பாக 8 ஆப்கானிஸ்தர்கள் கைது செயயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான அமைப்பு - ஆப்கானிஸ்தானில் சிறுவர் கடத்தப்படுவது தொடர்பாக, ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு அமைச்சர் அலி அகமட் யலாலியை விசாரணை செய்யுமாறு கேட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து, அதிக யணத்துடன் கிராமங்களுக்குச் செல்லும் இவர், பிள்ளைகளுக்கு நல்ல மதக் கல்வியை அவர்களுக்கு வழங்குவதற்கு வசதிகள் செய்துதருவதாகத் தெரிவித்து, அவர்களை ஆப்கானிஸ்தான் எல்லைக்கூடாகக் கடத்திச் சென்று பாகிஸ்தான் சமயப் பாடசாலைகளில், தவறான போதனைகள் மூலம் தமது தேவைகளுக்குப் பாவிப்பதாகவும், தலைநகர் காபூலுக்கு வெளியே ஆப்கான் அதிபர் 'கமிட் கர்சாய்' தனது அதிகாரங்களை நிலைநிறுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும், அந்த இடங்களில் இருந்தே இந்தச் சிறுவர்கள் கடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# பலஸ்தீன அமைச்சரவைக்கு யஸீர் அரபாத் அங்கீகாரம்!



புதிய அமைச்சரவை ஒன்றிற்கான அங்கீகாரத்தை அரபாத்தின் மத்திய குழு வழங்கியுள்ளது.

அரபாத்தின் மத்திய குழுவான 'பக்தா' வின் அதிகாரிகள் தெரிவிக்கும்போது, பிரதமர் பதவிக்கு நியமித்துள்ள 'அகமட் குரே' புதிய அமைச்சரவையின் உள்நாட்டு அமைச்சராக 'நசார் யுசெப்' ஐ நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரபாத்தின் இராணுவ அமைப்பின் கட்டுப்பாடுகளை மேற்பார்வை செய்யும் அதிகாரங்களை, புதிய உள்நாட்டு அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலஸ்தீனிய அமைச்சரவையில் அங்கம் வகிக்கவுள்ள மற்ற அங்கத்தவர்கள் இதுவரை தெரிவுசெய்யப்படவில்லை. ஆனாலும், அரபாத்தின் ஆதரவாளர்கள் பலர் தெரிவுசெய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. கமாஸின் ஆதரவாளர் ஒருவரும் தெரிவு செய்யபடவுள்ளார்.

பலஸ்தீனத்தின் சட்டக் கவுன்சிலுக்கு - அடுத்த வாரம் தனது புதிய அரசை, குரே அறிவிக்கத் திட்டமிட்டுள்ளார்.

## உலக நோக்கு

# ஐவரிக்கோஷ்டில் பிரெஞ்சுப் படைகள் தீவிரவாதிகளின் பகுதிக்குள் நுழைவு!



ஐவரிக்கோஷ்டில் முதன் முறையாக பிரெஞ்சுப் படையினர் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான 'புவாகே' இற்குள் பிரவேசித்துள்ளார்கள்.

அந்தப் பகுதியில் நடைபெற்ற வங்கிக் கொள்ளையொன்றைக் கட்டுப்படுத்த-படையினருக்கும், கொள்ளையருக்கும் இடையில் நடைபெற்ற போராட்டத்தில் - 23 மக்கள் கொல்லப்பட்டும், 37 பேர்வரை காயமடைந்துமுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் 'புவாகே' யில் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதிகள் - நாட்டின் அரைப்பகுதி பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். பிரெஞ்சு அரசு ஐவரிக்கோஷ்டின் அரசிற்கு துணைபுரிவதாக தீவிரவாதிகள் குற்றம் தெரிவித்து வந்துள்ளர்கள்.

ஆனால், வங்கிக் கொள்ளையை கட்டுப்படுத்துவதற்கு - பிரெஞ்சுப் படையின் பிரவேசத்திற்குத் தமது ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

சென்ற ஆண்டு ஐவரிகோஷ்டின் அதிபர் 'கபாபோ' விற்கு எதிரான கிளர்ச்சியின் பின் நாட்டின் வடக்கு, தெற்கு பிரதேசங்கள்- தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிற்குள்ளான வேளையில், பிரெஞ்சு 3800 துருப்புக்களை அந்நாட்டிற்கு அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா – ஈரான் அணு ஆயுதத்திட்டம் அமெரிக்கா மற்றும் ரஷ்யா கண்டனம்!



அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து - வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளின் அணுவாயுதத் திட்டங்களைக் கண்டித்துள்ளன.

ஈரானிடம் அணுவாயுதத் திட்டங்களோ அல்லது அணுவாயுதங்களோ இல்லையென்பதை உறுதிப்படுத்த வேண்டும் என, இரு தலைவர்களும் கேட்டுள்ளனர்.

இதனால், ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணுசக்தி அமைப்புடன் ஒத்துழைத்து, அவர்கள் ஈரானிடம் அந்த விதமான திட்டங்கள் இல்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்கள்.

அதேநேரத்தில், வியாழக்கிழமை சர்வதேச அணுசக்தி அமைப்பு, அணுவாயுதம் தொடர்பாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக ஈரான் செல்லவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஈரானின் அணுசக்தித் திட்டம் எதற்கும் உதவக்கூடாதென்ற அமெரிக்காவின் கருத்திற்கு, ரஷ்யா இணக்கம் தெரிவித்தாக அறிவிக்கப்படவில்லை.

ஈரானின் தென்பகுதியான 'புசெரில்' - 2005 ஆம் ஆண்டு ரஷ்யா முதலாவது அணு உலை ஒன்றை அமைத்துக் கொடுத்ததும், தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு, அணுசக்தியை உருவாக்குவதற்குத் தேவையான மூலப்பொருளான யுரேனியத்தை வழங்க ஒப்புக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஈராக் மீதான தாக்குதல் சரியானதொரு தீர்மானமே!

ஈராக்கின் மீது தனது நாடு போரில் ஈடுபட்டது சரியான ஓர் தீர்மானம் என, பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்தார். அது தவறான ஒரு செயல் எனத் தான் யாரிடமும் மன்னிப்புக் கோரத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - சதாம் ஹுசைனை அகற்றுவதற்கு எடுத்த முடிவு சரியானது. இதன் மூலம் உலகம் மிகவும் பாதுகாப்புமிக்கதாக மாற்றப்பட்டுள்ளது.

அங்கு ஜனநாயகம் ஒன்று உருவாகவுள்ளதால், அது மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளது.

இதனிடையே தனது படைகள் மூன்றாவது தடவையும் பணிபுரியவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊர்சுற்றி எழுதுவது

இந்திய விடுதலைப் போரில் பங்குபற்றிச் சிறைவாசம் அனுபவித்தவர்களில் பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் ஒருவர்.

சிறையிலிருந்தபோது - தமது மகள் பிரியதர்சினிக்கு (இந்திரா) கடிதம் எழுதினார். எங்கள் பாட்டிமார் கடிதம் எழுதும்போது - வீட்டில் ஆடு குட்டி போட்டிருக்கிறதா, மாமரத்தில் காய் காயத்திருக்கிறதா என்று விசாரிப்பது போல - நேரு தமது மகளுக்கு கடிதம் எழுதவில்லை. உலக வரலாற்றை, இந்திய வரலாற்றை, இந்தியப் பண்பாட்டை, அரசியல் நாகரிகத்தை, விடுதலை பற்றியெல்லாம் தமது கடிதங்களில் எழுதினார்.

இந்தக் கடிதங்களே - இந்திராவைத் தலைமைத்துவத்துக்குத் தகுதியாக உருவாக்கியது.

இதனால்தான் நேருவின் மறைவுக்குப் பின் இந்தியாவுக்கு இந்திரா தலைமைதாங்கி வழிகாட்டினார். இந்திராவின் இந்தியா என்றுகூட உலகம் அவரை அழைத்தது.

உலக விவகாரங்களில் நேரு என்ன சொல்கிறார் என்று உலக நாடுகள் காத்திருந்ததுபோல, இந்திரா என்ன சொல்கிறார் என்று கேட்பதற்கு உலக நாடுகள் காத்திருந்த காலமும் உண்டு.

இலங்கையில் - சுதந்திர இலங்கையின் முதல் பிரதம மந்திரி டி.எஸ்.சேனநாயக்க, தமக்குப் பின் தமது மகன் டட்லியையே அடுத்த பிரதமராக்க வேண்டுமென முன்கூட்டியே ஆளுநரிடம் சொல்லி வைத்திருந்தார்.

டி.எஸ். குதிரையிலிருந்து விழுந்து செத்துப் போனதும், அரசியல் வாரிசு உரிமை இருப்பதாகக் கருதியிருந்தவர்களை ஒதுக்கிவிட்டு, குலவாரிசு டட்லி பட்டம் சூடினார்.

அரசியல் வாரிசுகளில் ஒருவரான ஜே.ஆர். அரிசி விலையை உயர்த்திவிட மற்றொரு அரசியல் வாரிசு சேர்.ஜோன் ஆட்சிபீடம் ஏறினார்.

அரிசி விலையால் ஆட்சியை மாற்றலாம். மொழி வெறியால் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று அதிகாரத்துக்கு வந்தார் பண்டாரநாயக்க.

வேலை நிறுத்தங்கள், ஹர்த்தால்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்று ஆட்சியிலிருப்பவரை அகற்றலாம் என்பதை 1953 இல் அரிசிக்கான ஹர்த்தால் மூலம் பண்டாரநாயக்க நிருபித்தார்.

1959 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்பட்டதும் - அவரது துணைவியார் அரசியலுக்குவரத் தயங்கினார். குடும்பத் தலைவியாகவே இருந்துவிடத்தான் அவர் தீர்மானித்தார்.

பண்டாரநாயக்கவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அழிந்துவிடாமல் இருக்கவேண்டுமானால் - சிறிமா அரசியலுக்கு வரவேண்டுமென்று கட்சித் தூண்கள் வற்புறுத்தியதால் அவர் அரசியலுக்கு வந்தார். பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க என்ற திறமைசாலியான இளைஞனின் உதவி கிடைத்தது.

சிறிமா - கட்சிக்கும் தலைமை தாங்கினார். பண்டாரநாயக்க காட்டிய வழியிலேயே - மொழிவெறி, இனவெறி, வேலைநிறுத்தம், ஹர்த்தால், ஆர்ப்பாட்டம், பேரணி என்று சந்தர்ப்பத்துக்கேற்ற வகையில் சிறிமா அம்மையாரும் பின்பற்றினார்.

சந்தர்ப்பத்திற்கேற்ப இடதுசாரிகளையும் சேர்த்துக் கொள்வார். பின்னர் பிரித்துவிடுவார்.

பண்டித நேரு, மகளுக்குக் கடிதங்கள் எழுதி நாட்டுக்குத் தலைமைதாங்கக்கூடிய பண்புக்கு- பண்டாரநாயக்க தமது குடும்பத்துக்கு வழிகாட்டினவரா?

அப்பா காட்டிய வழியை அம்மா பின்பற்றினார். அப்பாவும், அம்மாவும் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்குக் காட்டியவழியில், காலத்திற்கேற்ற வளர்ச்சியில் புதிய பாணியை பின்பற்றுகிறார் மகள் சந்திரிகா.

1964 ஆம் ஆண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தில் பத்திரிகைக் கட்டுப்பாட்டு மசோதா, ஒரு வாக்கினால தோல்வியடைந்ததும் - பதவியைத் துறப்பதற்கு முன்வந்த சிறிமாவை, இடதுசாரிகள் தடுத்துத் தொடர்ந்தும் பதவியிலிருக்க வற்புறுத்தினர்.

ஆனால், ஜனநாயக பாரம்பரியத்துக்கு மதிப்பளித்து சிறிமா பதவி துறந்தார். பின்னர் 1965 ஆம் ஆண்டில் டட்லி ஆட்சிக்கு வந்தார். இந்த அரசின் சில திட்டங்களுக்கு சிறிமா எதிர்ப்புத் தெரிவித்தபோதும் ஆட்சியைக் கவிழ்க்க முடியவில்லை.

மகள் சந்திரிகாவோ ஆட்சியைக் கவிழ்க்கப் போகிறேன். கவிழ்த்துவிடுவேன் என்று மிரட்டிக் கொண்டே இருக்கிறார். இது எந்த அரசியல் பாரம்பரியம்?

இது சிறிலங்கா அரசியல் பாரம்பரியம் என்கிறார் நண்பர்.

ஜனாதிபதியைக் குண்டெறிந்து கொல்வதற்கு- பெண் போராளி காத்திருந்தார் என்று கரடி விட்டிருக்கிறாரே அநுரா என்று நண்பர் தொடர்ந்து சொன்னதும் - வதந்தி பரப்புவதில் இவர் மன்னன். முன்பு வெள்ளவத்தையில் ஒரு வீட்டில் குண்டுகள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், இவர் தானே சொன்னார் என்றார் மற்றொரு நண்பர்.

வதந்தி பரப்புபவர்களுக்குத் தண்டனை என்று எப்போதோ, எங்கேயோ பார்த்த நினைவு!

ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வேலை நீக்கம் செய்யப்பட்ட தற்காலிக ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைக்க அரசாங்கம் முடிவு!

(கொழும்பு)

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக, வேலையிலிருந்து நீக்கப்பட்ட தற்காலிக ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைப்பதற்கு - அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக, சுகாதார அமைச்சர் பி.தயாரத்தன தெரிவித்தார்.

சுமார் 1600 தற்காலிக ஊழியர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும், அவர் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதன்படி, தற்காலிக ஊழியர்கள் தாங்கள் பணிபுரிந்த வைத்தியசாலைக்கு இன்று சென்று, அங்குள்ள பணிப்பாளர்களிடம் மேன்முறையீட்டுக் கடிதமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அமைச்சர் கூறினார்.

இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு, தாம் வைத்தியசாலை பணிப்பாளர்களுக்குத் தெரிவித்திருப்பதாகவும், அரசாங்கம் இவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பதால், சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதில் பயனில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை - சுகாதார அமைச்சர் தங்களுக்கு அறிவித்தால், வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக பரிசீலிக்க முடியுமென, தொழிற்சங்க அதிகாரி தெரிவித்தார்.




இடைக்கால நிர்வாகசபை மற்றும் சமாதான நகர்வுகளுக்கு எதிரான பாதயாத்திரையை முன்னர் அறிவித்தது போன்று கண்டியிலிருந்து கொழும்புக்கு ஜே.வி.பி. ஆரம்பித்துள்ளது. இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளுக்கு எதிரான இரண்டாவது கண்டி- கொழும்பு பாதயாத்திரை இதுவாகும். இதில் ஜே.வி.பியின் பின்னால் மக்கள் ஐக்கிய முன்னணியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அணிநடைபோடுகின்றன.

முதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பண்டாரநாயக்கவுக்கு எதிராக பாதயாத்திரையை நடத்தினார்.

அதுவே 1958 ஆம் ஆண்டின் முதல் இனக்கலவரத்திற்கு வித்தானது. இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே. கட்சிக்கு எதிராக யாத்திரை செய்கிறது.

இது எத்தகைய கலவரத்திற்கு வித்தாகப் போகிறதோ...? ஜே.வி.பி. கலவரத்தை உருவாக்க திட்டமிட்டுவருவதாக அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க வேறு எச்சரித்திருக்கிறார். அதற்கான முன்னோடி யாத்திரையாக இது இருக்குமோ? 'பாதயாத்திரைகள் சிறிலங்காவில் மரணயாத்திரைக்கான முன்னோடி யாத்திரையாக உருவாகி வருகிறதோ?' என்கிறார் 1958 ஆம் ஆண்டு கலவரத்தில் மயிரிழையில் உயிர்தப்பிய ஒரு முன்னாள் அரச ஊழியர்.

-தெருவாசி

## திருமலையில் சிப்பாய் தற்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. திருகோணமலை படைத்தளம் ஒன்றில் கடமையாற்றி வந்த பி.எஸ். தர்மசிறி என்ற படைச் சிப்பாயே தற்கொலை செய்து கொண்டவராவர்.

## கூட்டமைப்பு விரைவில் பிரதமரைச் சந்திக்கும்!

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீள்க்குடியமர்த்துவது தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புளொட் அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பிரதமர் நாடு திரும்பியதும், இது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

# யுத்தம், இனவாதம் நோக்கி திரும்பியுள்ள ஜே.வி.பியினர்!

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி தற்பொழுது ஏகாதிபத்திய எதிர்ப்பு, இடதுசாரிக் கொள்கைகளை கைவிட்டு - யுத்தம், இனவாதத்தை நோக்கிப் பிரவேசித்துள்ளதாக, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவிசாவளையில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.வி.பியினர் சிவப்புக்கொடியை மறைத்துவிட்டு, தற்போது சிங்கக் கொடியைப் பாதயாத்திரையில் கொண்டு செல்வதாகத் தெரிவித்த அவர் -

மக்கள் விடுதலை முன்னணியிடம் சிங்கக்கொடி மட்டுமன்றி- தற்போது இனவாதமும், யுத்தவாதமுமே எஞ்சியிருப்பதாகவும் அவர் கூறினார்.

# சட்டவிரோத மதுபான விற்பனைக்கு விடுதலைப் புலிகள் தடைவிதிப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்தில் சட்டவிரோத மது விற்பனையை விடுதலைப் புலிகள் தடைவிதித்துள்ளனர்.

கலாசாரச் சீரழிவுகளை தடுப்பதற்காகவே, இந்த விற்பனையை தடை செய்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்தச் செயற்பாட்டினை, அந்தப் பகுதி பொது மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். (07)

# சுன்னாகம் மின்வழங்கும் நிலையம் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்!

## பாதுகாப்புக் கருதி புதிய நிறுவனம் நடவடிக்கை

சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்விநியோக நிலையம், வெகுவிரைவில் அதியுயர் பாதுகாபபு வலயத்துக்குள் மாற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கும் பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் நிறுவனம் தனது பணியை நிறைவுசெய்யவுள்ளதாகவும், மின்வழங்கல் பணியை புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள நிறுவனம், தனது பாதுகாப்புக் கருதி அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் காணியைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (111)

## வெடிக்காத நிலையில் எறிகணைகள் மீட்பு

சாவகச்சேரி - கல்வயல் பகுதியிலுள்ள வீட்டுவளவொன்றினை துப்பரவு செய்தபோது - வெடிக்காத நிலையில் இருந்த எறிகணைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வீட்டு உரிமையாளரினால் மீட்கப்பட்ட எறிகணைகள் - 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. (34)

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்கள் கைது

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த ஏழு இந்திய மீனவர்கள், நேற்று காங்கேசன்துறை கடற்பகுதியில் - கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இதில் இரண்டு படகோட்டிகளை, எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஏனைய ஐந்து மீனவர்களையும் இந்திய கடற்படையிடம் ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறும் நீதிவான் உத்தவிட்டார்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஊர்காவற்துறையிலும் 8 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீண்டகால யுத்தம்...

கூறிக்கொண்டாலும், இப்போது நடைமுறையில் அது இல்லை. மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய சூழலே இந்த நாட்டில் நிலவுகிறது என அவர் கூறினார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் யுத்தம் ஒன்று நடைபெற்றுவந்த போதிலும், நாட்டில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## புலிகளின்...

படுகிறது.

அயர்லாந்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் - கனடாவின் சுயாட்சி அமைப்புக்குழுவைச் சேர்ந்த ஆளும் சபையில் அங்கம் வகிக்கும் பேராசிரியர் ஜில் ரமிலாட்டும் பங்குபற்றவுள்ளார். அதேவேளை கனடா ஒன்ராரியோவின் முன்னாள் பிரதமர் பொப் ரேயும் இலங்கையின் சுயாட்சி தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

இந்தக் கூட்டத் தொடரில், பாரிஸ் மாநாட்டில் பங்குபற்றிய விடுதலைப் புலிகளின் குழுவினரே பங்குபற்றவுள்ளனர். இந்த மாநாட்டுக்கான ஒழுங்குகளை விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இருவேறு விபத்துகள்...

பிடமாகக் கொண்ட பாலசிங்கம் பிரபாகரன் என்பவர் காயமடைந்தார்.

நேற்று மாலை நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியால் சென்று கொண்டிருந்த கன்ரர் வாகனம் விசுவமடு-பழைய புளியடிப் பகுதியில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் கன்ரரின் பின்னாலிருந்த விசுவமடு தொட்டியடியைச் சேர்ந்த அமரசிங்கம், புதுக்குடியுருப்பு - 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரி.சண்முகபாலன் (வயது 23) ஆகிய இருவரும் பலியானதுடன், அஸ்வின்ராஜ் (வயது 5), தர்மபுரம் 5 ஆம் யுனிற்றைச் சேர்ந்த விஜியன் (வயது25), புளியம்பொக்கணையைச் சேர்ந்த வினோகாந், சாரதியான யோகன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தொடர்புகள்,தகவல்கள்...

திக்கப்பட்டது. நாங்கள் புரிந்துணர்ந்தது என்னவென்றால் விடுதலைப் புலிகளும், பொலிஸாரும் ஒன்றுகூடி இதுபற்றிப் பேசவேண்டும். தேவைப்படும் பட்சத்தில் எங்களையும் அந்தக் கூட்டத்திற்கு அழைத்துக்கொள்ளலாம். ஒரு விழாவை நடத்தும்போது கொடி ஏற்றுவதா, அதனால் எழக்கூடிய சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்பன குறித்து கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும். நாங்கள் இந்தக் கொடி விவகாரம் தீர்க்கப்பட வேண்டுமென்பதில் முயற்சிகளை எடுத்துவருகிறோம்.

இந்தக் கூட்டத்தில் முடிவான மற்றொரு முக்கிய விவகாரம் தங்களது சமாதான செயலகத்தில் விடுதலைப் புலிகள் ஆட்களை அதிகமாக்கி பணிகளை விரிவுபடுத்தப் போகிறார்கள் என்பது.

கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் எங்களுக்குமிடையிலான உறவுகள் பாதிப்படையவில்லை. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை உருவாக்கியது அரசாங்கமும், விடுதலைப் புலிகளும்தான். அவர்களுக்காகத்தான் நாங்கள் செயலாற்றி வருகின்றோம் என்றார்.

## தேசியக்கொடி ஏற்றுவதை...

யங்கள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது.

தேசியக் கொடியான புலிக்கொடியை ஏற்றுவது தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சமீபகாலமாக மேற்கொண்டு வரும் கெடுபிடிகள் குறித்து, இந்தக் கூட்டத்தில் புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் மற்றும் புலிகளின் தரப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேசியக்கொடியை எமது நிகழ்வுகளுக்கு ஏற்றுவது மக்களின் உணர்வு இதனைக் கண்காணிப்புக் குழுவினர் தடுக்கமுயல்வது தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கையையே ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மக்களின் உணர்வுகளைப் பாதிக்காத வகையில் கண்காணிப்புக் குழுவினர் செயற்படவேண்டும் என்றும், புலிகளின் தரப்புப் பிரதிநிதிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதையடுத்து தேசியக்கொடி விவகாரத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலையீட்டைத் தவிர்ப்பது தொடர்பாக, இரு தரப்புக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் சிறுவர்களை ஆட்சேர்ப்பது தொடர்பாக கண்காணிப்புக்குழு முரண்பாடான கருத்துக்களை தெரிவித்துவருவது குறித்தும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

ஏற்கனவே, இந்த விவகாரங்கள் இணக்கப்பாடு ஏற்பட்டு - புனர்வாழ்வு இடைத்தங்கல் முகாம்களை அமைப்பதற்கு - யுனிசெப்பும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், கண்காணிப்புக் குழு இந்த விடயத்தில் தலையிடுவது குறித்து புலிகள் விசனம் தெரிவித்தனர். இதனையடுத்து இந்த விவகாரத்திலும் தலையிடுவதில்லையென முடிவு செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.



(1512)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.